# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 352 ஐப்பசி 30 ஆம் நாள் சனிக்கிழமை 16 நவம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## அவசர அவசரமாக சி.ஐ.டி. பணிப்பாளர் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், நவ. 16
அரச தலைவர் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், குற்றப் 03

### 40ஆயிரம் பேர் கொல்லப்பட்டது என்று ஐ.நா. அறிக்கையிட்ட

# இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆயிரம் நாளைக் கடந்தும் போராட்டம்

### ‘வெள்ளை வான் முதலாளியே எங்கள் உறவுகள் எங்கே?’





யாழ்ப்பாணம், நவ. 16
போரின் இறுதிக் கட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு, சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் எங்கே? கடத்தப்பட்டு காணாமல் 23

# இன்று தேர்தல்

### நாடு முழுவதும் ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், நவம்பர் 16
இலங்கையின் 8ஆவது அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று சனிக்கிழமை நாடு முழுவதும் நடைபெறுகின்றது. இந்தத் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தேர்தலுக் கான ஏற்பாடுகள் யாவும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மக்கள் அச்சமின்றி இன்று காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் வாக்களிக்கலாம் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. 23

## அரச தலைவர் தேர்தலில் இறுதி நேர திருகுதாளங்கள்

23

## தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட மருத்துவர்

மந்திகை மருத்துவமனையில் நேற்றுச் சம்பவம் 23

### வடக்கில் 25,640

## வாக்காளர் அட்டைகள் தபாலகத்தில் தேக்கம்

23

## அம்பாந்தோட்டையில் போலி வாக்குச் சீட்டுக்கள்

வாக்குப்பெட்டி எடுத்துச் சென்ற வாகனச் சாரதி கைது 03

## வாக்குரிமை எமது வாழ்வுரிமை

### இந்துக் குருமார் அமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 16
வாக்குரிமை எமது வாழ்வுரிமை. எனவே தவறாது ஒவ்வொருவருமே இன்று வாக்களியுங்கள் என்று இந்துக் குருமார் அமைப்பினர் கேட்டுக்கொண்டுள் ளனர். 23

## ஒரு வேட்பாளரின் கட்சி ஆவணங்களை பயன்படுத்திய மற்றொரு வேட்பாளரின் முகவர்

### சுன்னாகத்தில் நேற்றுச் சம்பவம்
### தேர்தல் திணைக்கள அதிகாரிகளுடனும் முரண்பாடு

யாழ்ப்பாணம், நவ. 16
அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் பியசிறி விஜேயநாயக்கவின் யாழ்ப்பாண மாவட்ட முகவர், சிறிலங்கா பொதுமக் கள் முன்னணியின் ஆவ 03

## மதுபானங்களுடன் ஓடித் தப்பியது வாகனம்

23

# நவம்பர் மாத ராசிபலன்

## உங்களுக்கு எப்படி?






12 வருடங்களுக்குப் பிறகு தனுசு ராசிக்கு ராசி நாதன் குரு பகவான் சஞ்சாரம் செய்துள்ளார். இதனால் உங்களுக்கு இருந்த மன அழுத்தம் நீங்கும் பாக்கியம் ஏற்பட்டுள்ளது.

குரு வந்துள்ளதால், உங்களுக்கு ஒரு தெளிவான மன நிலை, முடிவு எடுக்க உதவிகரமாக இருப்பார். அதே சமயம் கடுமையான உழைப்பும் தேவைப்படும்.

குடும்ப உறுப்பினர், வாழ்க்கைத் துணையுடன் இருந்த நெருடல்கள் மறையும். முன்னோர்களின் ஆசி, குல தெய்வ அருள் கிடைக்க உள்ளது.

22ஆம் திகதிக்குப் பிறகு உங்கள் ராசியில் 4 கிரகங்கள் இருப்பார்கள். இதனால் மிகப்பெரிய மாற்றங்கள் நோக்கி நீங்கள் செல்வீர்கள்.

தொழில் முன்னேற்றம் ஏற்படும்.

உத்தியோகஸ்தர்களின் நுண்ணறிவுத் திறன் வெளிப்பட்டு மிக சிறந்த பலன்களைப் பெறுவீர்கள்.

பெண்களைப் பொறுத்த வரையில் சுப விரய செலவுகள் செய்வர்.

மாணவர்கள் கல்வியில் மிக சிறப்பான முன்னேற்றத்தை அடைவார்கள்.

**நட்சத்திரங்களுக்கான சிறப்பு பலன்கள்**

மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு உடல் ஆரோக்கிய மேம்பாடு ஏற்படும்.

பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குப் பொருளாதார முன்னேற்றம் உண்டாகும்

உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குச் சுப மங்கல செலவு, நிகழ்ச்சிகள் ஏற்படும்.




மகர ராசியினருக்கு இந்த மாதம் தொடங்கும் போது உங்கள் ராசி நாதன் சனி பகவான், அயன சயன ஸ்தானத்தில் குரு, கேதுவோடு இணைந்து இருக்கின்றார். உங்கள் ராசியில் எந்த கிரகமும் இல்லை. மிகவும் வேலை அதிகமாக இருக்கக் கூடிய நிலை உருவாகப் போகின்றது. இந்த கால கட்டத்தில் உங்களின் உடல் நிலை மீது அக்கறையை அதிகரித்துக் கொள்வது நலம் பயக்கும்.

ஒரே நேரத்தில் அதிக வேலை பளு ஏற்படும் போது மன அழுத்தம், நரம்பு சார்ந்த பிரச்சினைகள் ஏறப்பட வாய்ப்புள்ளது.

தொழில் ஸ்தானத்துக்கு லாபாதிபதி செவ்வாய் வர இருக்கின்றார். இதனால் உங்களின் தொழில் முன்னேற்றம் கண்டு நல்ல லாபத்தை பெறக் கூடியதாக இருக்கும்.

உத்தியோகஸ்தர்களுக்கு, அவர்களின் திறமைக்கு மதிப்பு கூடும் மாதம்.

பெண்களுக்கு சுப செலவுகள் சற்று கூடுதலாக இருக்கும்.

மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் இருக்கும் என்பதால் அதை பயன்படுத்திக் கொள்வது நல்லது.


**நட்சத்திரங்களுக்கான சிறப்புப் பலன்கள்**

உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு அரச சார்ந்த அனுகூலம் ஏற்படும்.

திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு சுப காரியங்கள் நடக்கும்

அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு வீடு, மனை, போன்றவற்றில் மிக நல்ல பலன்கள் உண்டாகும்.

# பல்லி எம் உடலில் எங்கு விழுந்தால் என்ன பலன் தெரியுமா?



அனைவரின் வீட்டிலும் இருக்கக் கூடியது பல்லி. பல்லி கத்துவது, மற்றும் உடலில் பல்லி விழுவதால் ஏற்படும் பலன்கள் என்ன என்பதை விரிவாக பார்ப்போம்.

**தலை :**

பல்லி தலையில் விழுந்தால், அவருக்கு வர இருக்கும் கெட்ட சகுனத்தை குறிக்கின்றது. அவரின் கெட்ட நேரத்தை சமாளிக்க பல்லி சொல்லும் எச்சரிக்கையாக பார்ப்பது நல்லது.

தலையில் பல்லி விழுந்தால் மற்றவர்களின் கடும் எதிர்ப்பு, மன நிம்மதி இழத்தல் நடக்கக் கூடும். தலையில் பல்லி விழுந்தால் அவரின் உறவினரோ அல்லது தெரிந்தவரோ இறப்பு ஏற்படலாம். இதனால் மன நிம்மதியை இழப்பார். இது போன்ற கெட்ட சகுனத்தை உணர்த்தும்.

**நெற்றி:**

நெற்றி மீது பல்லி விழுவது நல்ல சகுணமாக பார்க்கப்படுகின்றது. நெற்றியின் இடது பகுதியில் விழுந்தால் கீர்த்தி கிட்டும் என்றும், வலது நெற்றியில் விழுந்தால் லக்ஷ்மி கடாசம் ஏற்படும் என சாஸ்திரம் கூறுகின்றது.

**தலை முடியில் பல்லி விழுந்தால்:**

பல்லி தலையில் விழாமல், தலை முடியில் பட்டு விழுவதால், ஏதேனும் ஒரு வக்கயில் நன்மை நிகமும் என கூறப்படுகின்றது.

**முகத்தில் பல்லி விழுந்தால்:**

முகத்தில் பல்லி விழுந்தால், அவர்கள் வீட்டுக்கு உறவினர்களின் வருகை இருக்கும் என அர்த்தமாகும்.

**புருவத்தில் பல்லி விழுந்தால்:**

புருவத்தில் பல்லி விழுந்தால், ராஜ பதவி எனும் உயர்பதவியில் உள்ளவர்களிடமிருந்து உதவி கிடைக்கும்.

அதுவே கண்கள் அல்லது கன்னங்களின் மீது பல்லி விழுந்தால், ஏதேனும் ஒரு காரணத்துக்காக நீங்கள் தண்டிக்கப்படக் கூடும் என்பது அர்த்தம்.

**இடது கை மற்றும் காலில் பல்லி விழுந்தால்:**

எம் உடலின் இடது கை அல்லது இடது காலில் பல்லி விழுந்தால், அன்றைய தினம் முழுவதும் மிகுந்த மகிழ்ச்சி கிடைக்கும் என்பது ஐதீகம்.

**வலது கை மற்றும் காலில் பல்லி விழுந்தால்:**

எம் உடலின் வலது கை அல்லது வலது காலில் பல்லி விழுந்தால், அன்றைய தினம் உடல் நல பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பது அர்த்தமாகும்.

**பாதத்தில் பல்லி விழுதல்:**

பாதத்தில் பல்லி விழுந்தால், வரும் காலத்தில், நீங்கள் வெளிநாடு பயணம் செல்ல வாய்ப்பு கிடைக்கும் என்பது அர்த்தம்.

**வயிற்றுப் பகுதியில் பல்லி விழுந்தால்:**

வயிற்றுப் பகுதியில் பல்லி விழுந் தால், மிகவும் விலை மதிப்பு மிக்க பொருட்களான தங்கம், வைரம், வைரியம், இரத்தினம்போன்றபொருள் கள் வாங்கும் வாய்ப்புக் கிடைக்க பெருமாம்.

**தொடையில் பல்லி விழுந்தால்:**

தொடைப்பகுதியில்பல்லிவிழுந்தால், அவர்களுடைய பெற்றோருக்கு வருத்தத்தை ஏற்படுத்தும் செயலை செய்வீர்கள் என உணர்த்தும்.


**கழுத்தில் பல்லி விழுந்தால்:**

இடது பக்க கழுத்துப் பகுதியில் பல்லி விழுந்தால் காரிய வெற்றி உண்டாகும். வலது கழுத்தில் பல்லி விழுந்தால் அடுத்தவருடன் பகை உண்டாகும்.

**பல்லி விழுந்தால் செய்ய வேண்டியவை :**

எம்உடலின்எந்தபாகத்தின்மீதும்பல்லிவிழுந்தாலும் உடனே குளித்து விடுங்கள். குளித்த பின்னர் அருகில் உள்ள ஒரு கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்யுங்கள். அல்லது வீட்டிலேயே விளக்கேற்றி சுவாமியை வழிபட்டு பல்லி விழுந்ததால் எந்த கெட்ட செயலும் நடந்துவிடக் கூடாது என வேண்டிக் கொள்ளுங்கள்.

# கண் ஒரு அதிசயம்



அறிவியல் சக்திக்கு எட்டிய வரை ஒரேயொரு கருவியில் தான் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட நிறங்களைப் பிரித்து அறிய முடியும். இது ஒரு நுண்கருவி. விஞ்ஞானத்தின் பல்வேறு வகை நிறச் சேர்க்கைகளால் 5 லட்சம் வகை நிறங்களை உருவாக்கக் கூடும். இந்தச் சிறு கருவியால் மட்டுமே அத்தகைய நிற வித்தியாசங்களை உணர்ந்தறிய இயலும்.

அந்தக் கருவி வேறு எதுவும் இல்லை, நமது கண்கள்தான். இதனை இயக்குவதற்கு மின்சாரமோ, அணுத்திறனோ தேவையில்லை. இதன் நுட்பங்களைப் புரிந்து கொள்ள பெரிய பொறியியல் வல்லுணர்வு தேவையில்லை. நமது கண்ணின் கருவிழி வட்டமான விழியின் மையப்பகுதி தான் ஓரப்பகுதியை விடப் பொருள்களை தெளிவாகப் பார்த்து அறிகிறது. நல்ல பகல் வெளிச்சத்தில் கருவிழியின் மையமே, அதிக ஒளியைத் தெரிந்து கொள்கிறது. ஓரப் பகுதியால் மங்கிய ஒளியை மட்டுமே தெரிந்து கொள்ள முடியும்.

இதுவே இரவு நேரங்கள் என்றால், கருவிழியின் மையம் குறைந்த ஒளியைக் காணுகிறது. மாறாக ஓரப் பகுதியில் அதிக வெளிச்சத்தை உணர முடிகிறது. இதற்குக் காரணம் மிகவும் நுட்பம் வாய்ந்த பார்வைப் புலனாய்வு செல்களே ஆகும். இந்த அமைப்பின் அடிப்படையில், அவற்றுக்கு கழி செல்கள், கூம்பு செல்கள் என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. 7 மில்லியன் கூம்பு செல்கள் கருவிழியின் மையப் பகுதியில் இருப்பதாகவும், 130 மில்லியன் கழிசெல்கள் கருவிழி ஓரத்தில் அமிழ்ந்திருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த செல்களுக்கான ஊட்டச் சத்துக்கள் வைட்டமின் 'ஏ' மூலமே கிடைக்கிறது. இதனால் தான் வைட்டமின் 'ஏ' குறைவு ஏற்பட்டால் கண் நோய்கள் தோன்றுகின்றன. நமது கண்கள் ஒரு வினாடியில் 40ல் ஒரு பங்கு நேரத்தைத்தான் ஒரு முறை இமைப்பதற்கு எடுத்துக் கொள்கிறது. ஒரு மனிதன் தன் வாழ்நாளில் 250 மில்லியன் தடவை கண்களை இமைக்கின்றான்.

கண்களில் இருந்து வெளிப்படும் கண்ணீருக்கு 'பாக்டீரியா' போன்ற நச்சுக்களை கொல்லும் கிருமி நாசினி குணம் உண்டு. ஒரு மனிதனின் கண்ணீர் சுரபிகளை அகற்றிவிட்டால் நாளடைவில் கண்கள் வறண்டு, இறுதியில் குருடாகி விடும்.

# விடுகதைகள்

1. இந்த அழகிய சேலையை மடிக்க முடியாது, சிதறிக் கிடக்கும் வெள்ளிக் காசுகளை எண்ணவும் முடியாது...
2. குண்டு சட்டிக்குள் கறுப்புக் குதிரை சுற்றிச் சுற்றி ஓடுதாம்...
3. ஊசி போட வீட்டுக்கு வந்தாரு டாக்டரு, ஊசியைப் போட்டுவிட்டுக் காசு வாங்காமப் போனாரு...
4. அழகிய குகைக்குள் 32 வீரர்கள், அவர்கள் நடுவிலே ஒரு நாகம்...
5. கிழித்த கோட்டுக்குள் விலகாமல் ஓடுகிறான் கறுப்பன்...
6. இங்கே ஒட்டுகிறார்கள், அங்கே வெட்டுகிறார்கள்...
7. ஒற்றைப் பெண்ணுக்கு ஓராயிரம் சேலை...
8. ஒன்பதோ பத்தோ அத்தனை பிள்ளைகளுக்கும் ஒரே குடுமி...

**விடைகள்**

1. வானம், நட்சத்திரங்கள்,
2. ஆட்டுக்கல்,
3. கொசு,
4. வாய், பற்கள், நாக்கு,
5. ரயில்,
6. தபால் கடிதம்,
7. வெங்காயம்,
8. வெள்ளைப்பூண்டு

# மீண்டும் இணைகின்றனர் செல்வராகவன்- தனுஷ்



'காதல் கொண்டேன் படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் செல்வராகவன். தனுஷ் நடிப்பில் வெளியான இந்தப் படம் சூப்பர் ஹிட்டானது. இந்தப் படம் மூலம் தமிழ் ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தார் செல்வராகவன். இதையடுத்து, '7ஜி ரெயின்போ காலனி', 'புதுப்பேட்டை', 'ஆயிரத்தில் ஒருவன்', 'மயக்கம் என்ன', 'இரண்டாம் உலகம்' ஆகிய படங்களைக் கொடுத்து தனக்கென தனி ரசிகர் பட்டாளத்தையும் உருவாக்கி இருக்கிறார் செல்வராகவன்.

அண்மையில் வெளியான சூர்யாவை வைத்து 'என்ஜிகே' படத்தை இயக்கிய செல்வராகவன், அடுத்ததாக தனுஷை வைத்து படம் இயக்க இருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியானது. இந்த நிலையில் தனது அடுத்த படத்தின் வேலைகள் தொடங்கியிருப்பதாகச் செல்வராகவன், தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## ஒரு...

ணங்களைப் பயன்படுத்தியமை தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் சுன்னாகத்தில் உள்ள நாடாளுமன்றஉறுப்பினர் ஒருவரின் உறவினருக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று இடம்பெற்றுள்ளதாக அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று மதியம் வேலை வாய்ப்பு வழங்கப்படுவது தொடர்பான கூட்டம் இடம்பெறுவதாக தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு தேர்தல் முறைப்பாட்டு பிரிவு அதிகாரிகள், பொலிஸார் சென்றுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களுக்கான முகவர்களை நியமிக்கும் கூட்டம் இடம்பெறுவதாக அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்தக் கட்சி என்று அதிகாரிகள் கேட்டதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் போட்டியிடவில்லையே என்று அதிகாரிகள் மீளவும் கேட்டதற்கு, அங்கு நின்ற ஒருவர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் பியசிறி விஜேயநாயக்கவின் ஒப்பத்துடன் வழங்கப்பட்ட முகவருக்கான கடிதத்தை காண்பித்துள்ளார். அத்துடன் அங்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர் இராமநாதனும் நின்றுள்ளார். தேர்தல் காலத்தில் 7 பேருக்கு மேல் கூட்டம் கூட முடியாது என்பதை அறிவித்த தேர்தல்கள் திணைக்கள அதிகாரி, 30 பேர் வரையில் அங்கு நிற்பதால் சுன்னாகம் பொலிஸார் ஊடாக அவர்களைக் கலைந்து செல்லுமாறு பணித்தார்.

இருப்பினும் அங்கிருத்தவர்கள் கலைந்து செல்லவில்லை. இதனையடுத்து நடவடிக்கை எடுக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு பணித்தபோதும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. தேர்தல் திணைக்கள அதிகாரியிடம் வாக்குமூலம் பெறவேண்டும் எனத் தெரிவித்து நேரத்தை இழுத்தடித்துள்ளனர். இதற்கிடையில் அங்கிருந்தவர்கள், தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளை வசைபாடியபோதும் பொலிஸார் பேசாமல் இருந்துள்ளனர். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட பொலிஸாரும் அங்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமைதியாக இருந்தனர்.

இதன் பின்னர், தேர்தல்கள் திணைக்கள அதிகாரியிடம் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வாக்குமூலம் பெற்றுள்ளார். ஒரு வேட்பாளரின் முகவர் மற்றொரு வேட்பாளரின் கட்சி ஆவணங்களை வைத்திருந்தமை தேர்தல் விதிகளுக்கு முரணானது என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, எரிபொருள் நிலையத்தில் இடம்பெற்ற சம்பவத்தை ஒளிப்படம் எடுத்த 'உதயன்' செய்தியாளரின் அலைபேசியைப் பறித்த பொலிஸார், அதிலிருந்த படங்களை அழித்துள்ளனர். இது தொடர்பில் உதயன் செய்தியாளரால், தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ.5,26)

## அவசரமாக...

புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன நேற்று அவசர அவசரமாக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற மூன்று ஜெனரல்கள் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்தனர். இது தொடர்பில் பொலிஸ் தலைமையகம் அவதானம் செலுத்தியிருந்தது. இவர்கள் வந்தமைக்கான நோக்கம் தொடர்பில் எதுவும் தெரியவில்லை எனக் குறிப்பிட்டு சிறப்பு அறிக்கை முக்கிய தரப்புக்களுக்கு பொலிஸ் தலைமையகத்தால் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திடீரென நேற்றுக் காலை, ரவி செனவிரத்ன யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார். கொழும்பில் தமிழ் மாணவர்கள் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு உள்பட பல முக்கிய வழக்குகளை நடத்துபவர் இவர். யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த ரவி செனவிரத்ன, இராணுவத்தினரால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள வீதித் தடைகளை அகற்றுமாறு பணித்துள்ளார். இராணுவத் தளபதியால் வழங்கப்பட்ட பணிப்புக்கு அமைவாக அவை ஏற்படுத்தப்பட்டன என்றும் அவற்றை அகற்ற முடியாது எனவும் இராணுவத்தினர் கூறியுள்ளனர். இது தொடர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு ரவி செனவிரத்ன கொண்டு சென்றுள்ளார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைவாக அவை பின்னர் அகற்றப்பட்டுள்ளன. (ஒ.5)

## அம்பாந்தோட்டை...

கொழும்பு, நவ. 16

அம்பாந்தோட்டையில் வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் வாகனத்தில் போலி வாக்குச் சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று சனிக்கிழமை அரச தலைவர் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் நேற்றுக் காலை அனுப்பிவைக்கப்பட்டன. முல்கிரிகல பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்குப் பெட்டிகளைச் கொண்டு சென்ற ஹைஏஸ் வாகனத்திலிருந்து 58 போலி வாக்குச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. வாக்காளர்களுக்கு தெளிவூட்ட அச்சடிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களே அவை என்று பொலிஸார் கூறுகின்றனர். அவை முறையான வாக்குச்சீட்டுக்கள் அல்ல. சந்தேக நபர் திஸ்ஸமஹராமவில் வசிப்பவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5)

# கெட்டிக்கார சேவல்



ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்து இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்தபடியால் உற்சாகமாய் சேவல் கூவியது. பலதடவை கூவியது.

இதைக் கேட்ட நரி அங்கே வந்தது. நரிக்கு சரியான பசி இருந்தது. அந்தச் சேவலைப் பிடித்து சாப்பிட ஆசைப்பட்டது. ஆனால் சேவல் மரத்தின் மீது இருந்தபடியால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப்பார்த்து.

"சகோதரனே!, வணக்கம். ஒரு நல்ல செய்தியை நீ கேள்விப்பட்டாயா? பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. அன்பாய் நடந்துக் கொள்ள வேண்டும். சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன். இந்த நல்ல செய்தியைப் பற்றி பேசுவோம்" என்றது.

நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல் தலையைத் தூக்கிப் பார்த்தது.

இதைக் கண்ட நரி. "என்ன சகோதரா!, மிகவும் அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே. அங்கே என்ன இருக்கிறது?" என்று கேட்டது.

அதற்கு சேவல்,

"அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரி தெரிகிறது. வேட்டை நாய்கள் தானா? என்பதைக் கவனிக்கிறேன்" என்றது.

அவ்வளவுதான் நரிக்கு உடல் நடுங்கி விட்டது. வேகவேகமாக "சரி, சரி நான் அப்புறமாக வந்து உன்னிடம் பேசுகிறேன்" என்று கூறி புறப்பட்டது சேவல்,

"அருமை சகோதரா, போகாதே, நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? இப்பொழுது தானே நீ சொன்னாய், எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது" என்றது நரி "அந்த ஒப்பந்தைத்தைப் பற்றி அநேக பேர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். அந்த நாய்களுக்கு தெரியாமல் இருந்தால். நான் என்ன கதி ஆவது? நான் போகிறேன்" என்றது.

இதைச் சொல்லி விட்டு நரி ஒரே ஓட்டமாக ஓடி காட்டுக்குள் மறைந்தது.

சேவல் "யாரை ஏமாற்றப் பார்க்கிறாய், உன்னுடைய கெட்டிக்கார பொய்கள் என்னிடம் பலிக்காது" என்று கூறி சிரித்தது.

கெட்டிக்காரன் புளுகினாலும் அது புத்திச்சாலியிடம் வெளிப்பட்டு விடும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### நாகரத்தினம் இராசேந்திரம்



யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியினைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி மற்றும் 178, கச்சேரி நல்லூர் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் இராசேந்திரம் நேற்று (15.11.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் மீனாம்பிகை, ரமணி, ரஜினி, ஆகியோரின் அன்புத்தாயாரும் பரமேஸ்வரன், ரகுநாதன், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் மிதுனன், தக்ஷா, யாதவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் முத்துக்குமாரசாமி மற்றும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, இராசரத்தினம், தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2019) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
இல.178, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

---



பிறப்பு 02 . 10 . 1948

இறப்பு 14 . 11 . 2019

### சந்திரசேகரம் குமாரசாமி (G.S)
**(இளைப்பாறிய கிராம அலுவலர்)**

யாழ்.விடத்தல்பளையைப் பிறப்பிடமாகவும் மிருசுவில் வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது அவுஸ்திரேலியா (Sydney) ஐ வதிவிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் குமாரசாமி கடந்த (14.11.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான தம்பு, இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆனந்தேஸ்வரியின் பாசமிகு கணவரும் ரேணுகா (சுவிஸ்), அவுஸ்திரேலியாவில் வசிப்பவர்களாகிய பிரகாஷ், கார்த்திகா, சுவாதிகா, ரோகினி, கேதிகா, ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களாகிய தெய்வானைப்பிள்ளை, சீதேவிப்பிள்ளை, திலகவதிப்பிள்ளை தில்லைநடேசன், விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரனும் ரகுவிந்தன் (சுவிஸ்), நிருஷா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவச்சந்திரன் மற்றும் ஸ்ரீசங்கர் (இலங்கை), சாரூபன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரங்கீத், றோகீத், நிகாஷ், பிரனீல், பிரவீன், அர்வின், அஸ்வி, சஜானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.11.2019 புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு சிட்னி அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். C11686 (15/17)

தகவல்: குடும்பத்தினர் 077 371 8855,+61469910060

---

## To The Members Of
## TheAlumni Faculty Of Medicine , Jaffna.
## NOTICE OF MEETING - AGM

Notice is hereby given that the 4th Annual General Meeting of the Alumni, Faculty of Medicine, Jaffna will be held at the Board Room, Faculty of Medicine, Jaffna at 6.00 pm on 15th December 2019 (Sunday) for the following purposes.

1. To receive and adopt the report of the committee and the Audited Accounts for the year ended 31st December 2018.
2. To elect Officers bearers for 2019/2020
3. To appoint an Auditor
4. To consider any other business of which due notice has been given

**BY ORDER OF THE COMMITTEE OF MANAGEMENT**

Vinayagamoorthy Elankumar
SECRETARY, THE ALUMNI FACULTY OF MEDICINE JAFFNA.

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 17.10.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### பொன்னையா பத்மநாதன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும், அஞ்சலி நிகழ்வுகளும் 17.11.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரை அன்பு செய்தோர் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

தோற்றம் 06.02.1950 மறைவு 17.10.2019

நெசவுசாலை ஒழுங்கை,
இருபாலை வீதி, கோண்டாவில்.

அன்புடன்
குடும்பத்தினர்.

---

## சேவை

நீங்கள் அடகுவைத்த நகைகளை மீட்க முடியாத நிலையில் நாங்கள் அதனைத் திருப்பி அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும்.

தொடர்புகளுக்கு
077 206 9096

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த17.10.2019 வியாழக்கிழமை இறைபதம் எய்திய
எமது குடும்பத்தலைவி

### அமரர் சிவபாதம் சரஸ்வதி



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.11.2019) சனிக்கிழமை பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

விஸ்ணுஜா பந்தல் சேவை,
855, நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

(CS 24148)

குடும்பத்தினர்.
சுகுணதாசன் சுகந்தா
0771326489 / 021 222 6304

**EUROPE WORK VISA**
(Schengen Work Visa)

**FOREIGN EDUCATION**
(CANADA, AUSTRALIA, NEW ZEALAND, IRELAND, ITALY, MALAYSIA, SINGAPORE)

ஐரோப்பா நாடுகளில் வேலையுடன்
குடியேறும் வாய்ப்பும்

**Canada, Australia, Singapore**
போன்ற தலைச்சிறந்த நாடுகளில்
கல்வியுடன் குடியேறும் வாய்ப்பும்
இதோ உங்களிடத்தில்...

குறைவான செலவில்
உங்கள் கனவுகளை நினைவாக்க...
**இணையுங்கள்!!!**

E WINGS JAFFNA DAY2019
ENTRANCE FREE

NOVEMBER 30 — 1.30 pm - 6.30 pm
DECEMBER 01 — 8.30 am - 6.30 pm


Tilko Jaffna City Hotel

மேலதிக தகவல்களுக்கு
**077 4 646 226 | 076 9 243 141**

E WINGS
E WINGS FOREIGN EDUCATIONAL CENTRE (PVT)LTD

## மரண அறிவித்தல்

## இராசையா பரமேஸ்வரன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி, அப்பிளாணையில் வசித்தவரும் தற்போது பத்தானை வீதி, தாவடி தெற்கு கொக்குவிலில் வசித்தவருமான இராசையா பரமேஸ்வரன் **(14.11.2019)** வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - நல்லம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் நவமணி தம்பதிகளின் மருமகனும் யோகராணியின் அன்புக் கணவரும் ஜர்மிளா, ஜாமினி (சுவிஸ்), ராகுலன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவநீதன் (அளவெட்டி /மல்லாகம்.ப.நோ.கூ.சங்கம்), மகேந்திரன் (சுவிஸ்), மைதிலி ஆகியோரின் பாசமிகு மாமனும் பத்மலோஜினி (கனடா), காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் கருணாநிதி, சறோஜினி தேவி (சுவிஸ்), சுசிலாதேவி (அவுஸ்ரேலியா), பத்மினிதேவி (கனடா), லங்கேஸ்வரி (கனடா), சுந்தரேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும் சற்குணானந்தன் (கனடா), காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் விவேகானந்தன் (சுவிஸ்), இரத்தினேஸ்வரன் (அவுஸ்ரேலியா), கலைஞானம் (கனடா), இரத்தினேஸ்வரன் (கனடா), கெங்கா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சேந்தன் , சாரங்கன் , சகானா, றாம்சன் (சுவிஸ்), றம்மியா(சுவிஸ்) ஆகியோரின் . அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(17.11.2019)** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **10.00** மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்தானை வீதி,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 370 2393, 078 303 5004**

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

APPLY NOW
SANCHU 0777102131

BSc (Hons) BMS

BTEC HND BMS

FOUNDATION IN SCIENCE

After A/L



BIOMEDICAL SCIENCE

Leading to BSc (Hons)

UGC Recognized
TVEC Approved

20 years of TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION

BTEC | Pearson | Southampton Solent University | University of Wolverhampton | RICS | CIOB | University of East London

TVEC APPROVED | ISO 9001:2015 CERTIFIED

Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna. 021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk

## விழிநீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
சண்முகநாதன் கஜந்தன் அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி சண்முகநாதன் அம்பிகை**
அவர்களின் மறைவுக்கு எமது விழிநீர்
அஞ்சலியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,**
**யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்**

## மரண அறிவித்தல்

### ஜோன் செல்லையா ஆதர்

(ஓய்வுபெற்ற இ.போ.ச.களஞ்சிய காப்பாளர்)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜோன் செல்லையா ஆதர் (ஓய்வுபெற்ற இ.போ.ச. களஞ்சியக்காப்பாளர்) நேற்று (14.11.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் செல்லையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் ஞானப்பிரகாசம் சொர்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மேரி பெனட் ரோகிணியின் அன்பு கணவரும் காலஞ்சென்ற எட்வேட்ராயா, சாலட் றொபேட், விக்ரர் மற்றும் Dr.லோறன்ஸ் (UK), தங்கராணி, டொறத்தி (Germany), ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஜேசுதாசன், ராசன் (UK), உதயா (UK), ரகு(UK), கிருபா, விஜி (France) ஆகியோரின் அன்பு மைத்துனரும் டொறிசா, நிர்ஷா, டில்சன் (பொறியியலாளர், Stracta நிறுவனத்தின் இயக்குநர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மயூரதன் (முகாமையாளர்- Sunshine Healthcare Lanka Ltd), தேவநேசன் (உதவிப் பொறியியலாளர் - நீர்ப்பாசன திணைக்களம் - வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டினேசன், யோகித், நியோலின், நெல்சி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இறுதி நல்லடக்க ஆராதனை உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலயத்தில் இன்று (16.11.2019) சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-குடும்பத்தினர்.**

077 374 7538, 077 201 4797, 077 617 4226

## மரண அறிவித்தல்



பிறப்பு 12 06 1938
இறப்பு 13 11 2019

### திருமதி ஞானசிவசோதிடராசா இராசரத்தின சிரோண்மணி அம்மாள்

(கிளி அக்கா)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பழம் வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் தற்போது அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தின சிரோண்மணி அம்மாள் கடந்த (13.11.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஞானசிவசோதிடராசா (ஓய்வுபெற்ற புங்கயிரத நிலைய சார்ஜன்ட்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் தனலட்சுமி, காலஞ்சென்ற DR.செல்வரட்ணம், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, தங்கலட்சுமி, காலஞ்சென்ற ஸ்ரீசண்முக நாதன் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜோதிப்பிரசாந்தி (UK), துசாந்தி (U.S.A), சிவாந்தி (அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் - பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லிங்க தயானன் (UK), தவச்செல்வன் (U.S.A), பரணிதரன் (விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி, கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜக்சனா, சிவேந்திரன், டிலக்சி, மிதுரன், சமர்த்திகா, சசிவர்மன், தர்சனா, கியானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வர்ண கேஸ்வரி, கமலாதேவி, வாலேஸ்வரன், காலஞ்சென்ற DR. செல்வராசா, கமலாம்பிகை, இராசமலர், காலஞ்சென்ற இராசையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அராலி வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (17.11.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே: 0771751400
0777620425

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### தரம் 06 மாணவர் அனுமதி - 2020

எமது பாடசாலையில் 2020 ஆம் ஆண்டுக்கான தரம் 6 அனுமதி கல்வி அமைச்சின் சுற்றுநிருபங்களுக்கு அமையவே நடைபெறும். சுற்றுநிருபங்களுக்கு முரணான வகையில் அன்பளிப்புக்கள், நிதிக்கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டாம் என பெற்றோர்களை வேண்டிக்கொள்வதுடன், தரம் 6 அனுமதியில் பாடசாலை அனுமதிக்குழுவே முழுமையான பொறுப்பினை வகிக்கின்றது. அனுமதி தொடர்பாக பாடசாலை அனுமதிக்குழு தவிர்ந்த வேறு எவருடனும் தொடர்புகொள்ள வேண்டாம் என்பதனையும் அவ்வாறு கொள்வதால் ஏற்படுகின்ற ஏமாற்றங்களுக்கு தாங்களே பொறுப்பு என்பதனையும் அறியத்தருவதோடு தரம் 6 அனுமதி தொடர்பான ஏதாவது முறையீனங்கள் ஏற்படின் அது தொடர்பாக எமக்கு தங்களின் முறைப்பாடுகளை முன்வைக்கலாம்.

**தலைவர்/ செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.**

## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27 . 10 . 1946
இறப்பு 29 . 10 . 2004

அமரர்

### இராசையாஐயர் நடனசபாபதிசர்மா

திதி : சங்கடஹரசதுர்த்தி

பதினைந்து ஆண்டுகள் சென்றாலும் எம் நினைவுகள்
உங்களை விட்டு நீங்காதப்பா

என்றும் உங்கள் நினைவுகளுடன் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஊரெழு மேற்கு,
காளிகோயிலடி, ஊரெழு.

(CS 29320) (4417)

## 24ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்



செல்வன்

### தருமலிங்கம் பாலச்சந்திரன்

திதி: சங்கடஹர சதுர்த்தி
(16.11.2019)

மண்ணில் மழலையாய் 24.10.1970
விண்ணில் தெய்வமாய் 11.11.1995

ஆண்டுகள் இருபதோடு நான்கு ஆனதுவே
உன் அழகு முகம் கண்டு "சந்திரா"
நீ வாழ்ந்த பாதி வாழ்க்கையிலே
சேனை சனம் சூழ்ந்து இருக்க
குதுகலமாய் வாழ்ந்தாயே!
குலம் சிறக்க வாழ்ந்திடுவாய் என்று எண்ணிய தெல்லாம்
எமன் வடிவில் எறிகணை வந்து எடுத்ததுவோ - உன் உயிரை
ஆண்டுகள் பல ஆனாலும் ஆறாது எம் மனக்குமுறல்

(C10006)

நிரந்தர முகவரி:
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை
தற்காலிக முகவரி:
கப்பல் வளவு, ஐயனார் வீதி, சுன்னாகம்.

என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா, அப்பா மற்றும்
தம்பி, தங்கை குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் தேசிய கல்வி
யியற் கல்லூரியின் சிரேஷ்ட
விரிவுரையாளரான **ப.பரணீதரன்**
அவர்களது மாமியார்

### சிரோண்மணி ஞானசிவசோதிடராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS 29341)

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகம்**

## பணியாளர்கள் தேவை - (Vacancy)

1. கட்டட பொறியியலாளர் (Civil Engineer)
2. தொழில்நுட்ப அலுவலர் (T.O)- (Minimum One Year Experience)
3. தொழில்நுட்ப உதவியாளர் (T.A)
4. தொழில்நுட்ப அலுவலர் – பயிலுனர்

Contact No: 075 918 0060 (திங்கள்–வெள்ளி வரை)
8.30AM - 5.00PM (மணிவரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)
E.mail : qualitybuilders19@gmail.com

## கார் விற்பனைக்கு

**Nissan B11**
13-XXXX இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 668 8927

## பணிப்பெண் தேவை

1 வயதுடைய குழந்தையைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. (வாரத்தில் 3 நாட்கள்)

Contact- 076 294 3552

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்நகரை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள பிரபல்யம் வாய்ந்த புத்தகசாலை ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள வேலையாட்கள் (ஆண், பெண்) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 29323)

0773992087

## ஐங்கரன் பாம்

பிறவுன் றோட், கலட்டிச்சந்தி
யாழ்ப்பாணம்.

16.11.2019 - 22.11.2019


விலை விபரம்

- புறொயிலர் உயிருடன் - 290/=
- சுத்தம் செய்து - 450/=
- மற்றும் பேரஸ், கல்பேட், ஊர்ச்சேவல்கள் உண்டு.

T.P- 077 905 0165

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021493 1111

## மரண அறிவித்தல்




தோற்றம் 03.03.1931
மறைவு 14.11.2019

### திரு.செல்லையா விக்கினேஸ்வரமூர்த்தி

யாழ். தென்புலோலி உபயகதிர்காமத்தை பிறப்பிடமாகவும், உபயகதிர்காமம், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற பிரதம தபால் அதிபர் செல்லையா விக்கினேஸ்வர மூர்த்தி அவர்கள் 14.11.2019 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பாறுபதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், மங்கையர்க்கரசி அவர்களின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம், பத்மலோசினி, இன்பநாதன் ஆகியோரின் அன்புத்தந்தையும், பூங்கோதை, யோகரஞ்சன், டினோ ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியங்கா, கீதாஞ்சலி, சோம்ஈஷ்வர், இனேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பதுமநாயகம், ஆசிரியை புவனேஸ்வரி, பகவதி, அம்பிகை பாகன் ஆகியோரின் சகோதரரும், தனலட்சுமி, விமலாதேவி, கமலாதேவி, அம்பிகாதேவி, ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 17.11.2019 அன்று காலை முதல் பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகளின் பின்னர், மதியம் அளவில் நல்லடக்கத்துக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தொடர்புகளுக்கு
பாலன் (மகன்) +94 776271401
நாதன் (மகன்) +1 510-565-4296
யோகரஞ்சன் (மருமகன்) +94 716458239

# மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.12.1935 | 13.10.2019 |

## சின்னையா நடராசா (ராசண்ணை)

**(தேநீர்சாலை – வல்லிபுர கோயில்)**

புலோலி தெற்கு சின்னத்தாயைப் பிறப்பிடமாகவும், வல்லிபுர கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நடராசா 13.11.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பசுபதி மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற துரைலிங்கம் ஆகியோரின் சகோதரரும், விஷ்ணுகுமார் (கனடா), சிவசக்திவேல் (சுவிஸ்), இராஜராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி (கனடா), றஞ்சினி (சுவிஸ்), நந்தகுமார் ஆகியோரின் மாமனாரும், கனிஸ்ரன், டெனுஸ்கா, சுருதி, பிரதீப், கருணியா, மதுசூதனன், கிருஷ்ணபவானி, கௌரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வல்லிபுரகோவிலடி,**
**புலோலி தெற்கு.**

(CS/24150)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**076 547 3635**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



(CS/29342)(11)

கடந்த 17.10.2019 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது பாசதீபம்

**அமரர் திருமதி**

## கமலலட்சுமி நாகராஜா

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நாளை (17.11.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் (இல.345, கோயில் வீதி, நல்லூர்) நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடை-பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தோடு அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**108/3, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**021 222 8344**

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்


கலைமகளின் கலைச்சிகரம்

அமரர் **தில்லை சின்னையா**

(ஓய்வு நிலை உத்தியோகத்தர்
சந்தைப்படுத்தல் திணைக்களம்)

**திதி: 12.11.2019**

ஞானச் சுட ரேற்றி நின்றானை நல்லானை
தேனமுதச் சொல்லானை நாமிழந்தோம்
- வானவழி
பார்த்துத் தொழுகின்றோம் பரமனிடங்
- கேட்கின்றோம்
காத்தருள அவன் கருணை வேண்டி.
"எங்கே உங்களது அன்புடை நெஞ்சம்
ஏங்கித் தவிக்குதே எங்களின் நெஞ்சம்"



கண் மகிழ 05.07.1936
கண் நெகிழ 14.11.2016


(CS-29231-13,17)

**"கவிதாலயா"**
**15, நொத்தாரிஸ் வீதி,**
**அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.**

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரர்கள், பூட்டப்பிள்ளைகள்.

# அப்பாக்குட்டி கந்தையா செல்வவிநாயகம்

(முன்னைநாள் கரைச்சிதெற்கு ப.நோ.கூ.சங்கத்தலைவர், இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலயமுன்னைநாள் தலைவர், தர்மகர்த்தா, தேர்த்திருப்பணிச்சபை செயலாளர்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30.11.1939 | 13.11.2019 |

கப்புதூ, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி, 48/3 திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி கந்தையா செல்வவிநாயகம் அவர்கள் 13.11.2019 புதன்கிழமையன்று கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - லட்சுமி தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற வீரகத்தி - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் (பாக்கியம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றசிவகாமிப்பிள்ளை , கந்தசாமி, சிவபாக்கியம், பரமு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கனகாம்பிகை (அம்பி - கனடா), அப்பிகைபாகன் (செல்வன்- நெதர்லாந்து), கேதீஸ்வரன், (வரன் - கிளிநொச்சி), மோகனாம்பிகை (மோகனா - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருளானந்தம், லிங்கலதா, செல்வரஞ்சினி, தயாளன், சுகுமார், சதீஸ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் துளசி, தனுஷ், அஸ்மித்தா, சிந்தூரி, கேதாரகன், பபித்தா, கனிஷ்கவினோஜ் ஆகியோரின்பேரனும், காலஞ்சென்ற சிவராசா, காலஞ்சென்ற விக்னேஸ்வரன், லோகேஸ்வரி, சந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (17.11.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இரணைமடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(1020)

தகவல்: **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22.01.1933 | 13.11.2019 |

## செபஸ்தியாம்பிள்ளை ஜோசப் சவுந்தரராஜ்

(Retired District Inspector of Telecommunication - D.I.T)

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை ஜோசப் சவுந்தரராஜ் 13.11.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செபஸ்தியாம்பிள்ளை (இராசதுரை) அடைக்கல ஆரோக்கிய இராசமணி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி. சூசைப்பிள்ளை அழகம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற மேரி ரீட்டா (லீலா) அவர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான தொம்மைப்பிள்ளை (சுந்தரராசா), அன்னம்மாள் சற்குணமலர்(மலர்), சாமிநாதர் (தர்மராசா) மற்றும் அந்தோணிப்பிள்ளை (துரைராசா), செபமாலைநாயகி (குணசீலி) ஆகியோரின் அன்பு சகோதரனும், பிலிப் மோகன் (USA) காலஞ்சென்றவர்களான மரீனா சாந்தினி, சார்ள்ஸ் ரொஷான், மற்றும் நொயிலின் வினோதினி(Swiss),எட்வேட் சசிதரன்(Canada), அன்ட்ரூ றஞ்சிதன்(Canada) ஆகியோரின் அன்பு தந்தையும், இந்திரா (USA), டேவிட் பவன்(Swiss) கல்பனா (Canada), ஜெனோபா (Canada) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் , ரொஷானி, ஸ்ரெபானி (Swiss) பென்சன் , நேத்தன், ஏட்றியன்(Canada) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 18.11.2019 திங்கட்கிழமை பி.ப. 2.30 மணியளவில் வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தெனியம்பை,**
**வல்வெட்டித்துறை,**
**யாழ்ப்பாணம்.**

(CS/29312)(17)

**தகவல்:**
**அன்ட்ரூ - 070 409 2018,**
**சசி - 076 644 7116,**
**வினோ - 078 8233754**






பிள்ளைகளின்
வாழ்க்கைக்காக
அனைவரையும்
வாக்களிக்கச் செய்வது
தாய்மார்களின்
பொறுப்பாகும்

16ம் திகதி காலையில்
அனைவரையும் வாக்களிப்பு
நிலையத்திற்கு அனுப்புங்கள்

# பேராபத்தானது டெங்கு நோய்

ஆ.ஜென்சன் றொனால்ட்

மழைகாலத்துடன் பெரியளவில் சுகாதார, பொருளாதார மற்றும் சமூகவியல் பிரச்சினையை ஏற்படுத்தும் டெங்குநோய் பற்றிய அறிவும், மனப்பாங்கு விருத்தியும், நின்று நிலைக்கும் செயற்பாடுகளுடன் கூடிய நடத்தை மாற்றமுமே எம்மையும் சமூகத்தையும் காக்கும். உலகளாவிய ரீதியில் வருடந்தோறும் சராசரியாக 10 ஆயிரம் இறப்புக்களை ஏற்படுத்துவதோடு 100 மில்லியனுக்கும் அதிகமான வர்களுக்கு நோய்த்தொற்றை ஏற்படுத்தும் உயிர் கொல்லி நோயாக டெங்கு எழுந்து நிற்கிறது.

குறிப்பாக வெப்ப வலய நாடுகளிலேயே இதன் தாக்கம் ஆதிக்கம் செலுத்துகின்றது. தென்கிழக்கு ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்ரேலியா, கரிபியன் மற்றும் தென், மத்திய அமெரிக்கா பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் இந்தவருடம் ஐப்பசி மாதம் வரை டெங்கினால் 85 இறப்புக்கள் ஏற்பட்டிருப்பதோடு 64 ஆயிரத்து 290 பேர் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர். இதில் மேல் மாகாணத்திலேயே அதிக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்கு நோயின் தாக்கம் தொடர்ந்து வருடாந்தம் தீவிரமடைந்து வருவதோடு அடுத்த அறுபது வருடத்தில் உலக சனத்தொகையில் 60 வீதமானோர் இதன் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க வேண்டி வருமெனவும் ஆய்வுகள் எச்சரிக்கின்றன. சிறுவர்கள் மற்றும் இளம் பெண்பிள்ளைகளில் டெங்கு நோயின் தாக்கமானது தீவிரமானதாகவும் இறப்பை ஏற்படுத்தும் சாத்தியங்கள் அதிகமானதாகவும் இனங்காணப்பட்டுள்ளது. வைரசுவினால் ஏற்படும் இந்த டெங்கு நோயை குணமாக்கும் மருந்துகள் எதுவும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை என்பது மிகவும் கவனத்துக்கும் கவலைக்கும் உரியதாகும்.

### டெங்கு அறிகுறிகள்

தீவிரமான காய்ச்சல், கண்களின் பின்புறம் வலி, தலைவலி தசை மற்றும் மூட்டுவலி, வாந்தி அல்லது ஓங்காளம், அடிவயிற்று நோவு எனும் அறிகுறிகளோ இவற்றில் சில டெங்கின் ஆரம்ப நிலை அறிகுறிகளாகக் காணப்படலாம்.

முரசு கரைதல், மூக்கிலிருந்து குருதிக் கசிவு, முகம், கை, நெஞ்சு மற்றும் ஏனைய உடற்பகுதிகளின் தோலில் சிவந்த தழும்புகள் மற்றும் பருக்கள் தோன்றுதல், கடுமையான வயிற்றுவலி, கடுமையான வாந்தி, வாந்தி கபிலம், சிவப்பு நிறமாக வெளியேறல், கருமைநிறமான வயிற்றோட்டம், மலவெளியேற்றம், மாதவிடாய் காலத்தில் அசாதாரண அதிக குருதி வெளியேற்றம், சிறு நீரின் அளவு குறைதல் என்பன டெங்கின் தீவிர நிலையாக அமையும்.

காய்ச்சல் திடீரென குறைவடைதல், சோர்வு, களைப்பு, தோல் பிசுபிசுப்புத்தன்மை, வெளிறல், கை, கால் குளிர்வடைதல், மாறாட்டம் அமைதியின்மை எனும் அறிகுறிகள் ஏற்பட்டால் இந்த நிலை மிகஆபத்தானது என்பதோடு சாவு ஏற்படும் வாய்ப்பாகவும் அமையலாம்.

டெங்கைப் பரப்பும் 'ஈடிஸ்' வகை நுளம்புகள் தமது முட்டைகளை நீருள்ள கொள்கலனின் சுவரில் ஒட்டி இடுவதனால் நீர் வெளியில் ஊற்றப்பட்டாலும் முட்டைகள் அப்பாத்திரத்திலேயே ஒட்டியிருக்கும். இவை நீரின்றிய நிலையில் 6 மாதம் தொடக்கம் ஒரு வருடம்வரை உயிர்ப்பாக இருந்து மீண்டும் நீர் கிடைக்கும் போது பொரிக்கும் ஆற்றல் உடையவை. டெங்கு நுளம்பானது உயரமான இடங்களுக்குப் பறந்து செல்லாது என நம்பப்பட்ட போதும் தற்போது பத்துமாடிக்கட்டத்தின் மேல்ப்பகுதிவரை சென்று முட்டையிட்டு பெருகுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவை பெரும்பாலும் தெளிந்த, அசைவற்ற நன்னீர் தேங்கும் கொள்கலன்களிலேயே முட்டையிடுகிறன. அடுத்தடுத்து பலபேரை தொடர்ந்து கடித்துக் குருதியை உறிஞ்சும் இயல்புடைய இந்த நுளம்பு பெரும்பாலும் மனிதர்களைத் தேடிக் கடிப்பதோடு, மனிதனால் உருவாக்கி வீசப்படும் அல்லது பராமரிப்பற்ற கொள்கலன்களிலேயே தனது முட்டைகளை இடுகிறது.

குறிப்பாக நீரேந்தும் பொலுத்தீன், பிளாஸ்ரிக் பொருள்கள், கண்ணாடிப் போத்தல்கள், தகரப்பேணிகள், சிரட்டைகள், பறவைகளுக்கு நீர் வைக்கும் மாத்திரங்கள், பூச்சாடி மேடைகளின் கீழ் வைக்கப்படும் தட்டுகள்போன்றவற்றிலேயேஇவைமுட்டையிடுகின்றன. முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறைவுடலி எனும் முழு உருமாற்ற வாழ்க்கை வட்டமுடையவை இந்த நுளம்புகள் இவை 500 மீற்றர் வரை இயல்பாக பறக்கக் கூடியவை என்றாலும் காற்றோடு அடிக்கப்பட்டுப் பல கிலோமீற்றர் தூரம் வரை செல்லக் கூடியவை. ஒருதடவையில் 200 வரையான முட்டைகள் வீதம் 4 தடவைகள் தமது ஆயுட்காலத்தில் முட்டைகளை இடுகின்றன. சில வாரங்களையே (4 தொடக்கம் 6) ஆயுட்காலமாக உடைய இந்த நுளம்புகள் தொடர்ந்து சூழலில் நிலைத்திருக்க முடிவது அவை முட்டையிடக் கூடிய நீர்தேங்கும் சூழல் காணப்படுவதேயாகும்.



### உறுதி செய்வது எப்படி?

அறிகுறிகளின் மூலம் டெங்கு காய்ச்சல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் போது வைத்திய ஆலோசனைப்படி குருதி எண்ணிக்கைப் பரிசோதனை செய்வதன் மூலம் ஆரம்பத்திலேயே இனங்கண்டு வைத்திய முகாமை செய்வதற்கு வழியேற்படுகிறது. குருதிப்பரிசோதனையில் குருதிச் சிறுதட்டுக்களின் எண்ணிக்கை 1 மில்லி மீற்றருக்கு 5 ஆயிரத்துக்கும் குறைவாகவே இருப்பின் டெங்கு காய்ச்சல் என உறுதி செய்யலாம். இந்தப் பரிசோதனையைக் காய்ச்சல் ஏற்பட்டு இரண்டு நாள்களின் பின் செய்வது பொருத்தமானதாக இருக்கும்.

### காய்ச்சலை கட்டுப்படுத்தல்

காய்ச்சலைக் கட்டுப்படுத்த பரசிற்றமோல் வில்லைகளை மாத்திரமே ஆறுமணித்தியால இடைவெளியில் பாவிக்கவேண்டும். வேறு வலி நிவாரணிகளான அஸ்பிரின், புரூபன், டிஸ்பிரின், மெபனமிக், மற்றும் டைக்ளோபெனக் என்பவற்றைப் பயன்படுத்தக் கூடாது. இவை குருதிக் கசிவுள்ளவர்களில் அதனை மேலும் அதிகரிக்கும்.

காய்ச்சல் ஏற்பட்டவரை நுளம்பு வலையினுள் ஓய்வெடுக்க வைப்பதோடு இளம் சுடுநீரில் நனைத்த துணியினால் ஒத்தடம் கொடுத்து காய்ச்சலைக் குறைக்க வேண்டும். போதிய நீராகாரங்களை வழங்க வேண்டும். உரிய வைத்திய ஆலோசனை பெற்று வைத்தியசாலையில் தங்கி பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்தை ஆரம்பத்திலேயே பெறுவது சிக்கல் மற்றும் ஆபத்து நிலையை தவிர்க்க உதவும்.

### எவ்வகையான உணவுகள்

டெங்குக் காய்ச்சலின் போது உடற்கலங்களில் நீரிழப்பு ஏற்படுவதால் அதை ஈடுசெய்ய இளநீர், பால், ஜீவனி, பழங்கள், காய்கறிச்சாறு, அரிசிக்கஞ்சி, சூப் போன்றவற்றை அருந்தக் கொடுக்க வேண்டும். சிறு குழந்தைகளுக்கு சிறிதளவு குளுககோசு சீனி அடிக்கடி கொடுத்தல் சிறந்தது.

இதைவிட நோயாளியின் விருப்பத்துக்கு ஏற்ப இலகுவில் சமிபாடடையக் கூடிய ஆகாரங்களை சிறிது சிறிதாக வழங்கலாம் எண்ணை கொழுப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்க்கலாம். கறுப்பு, சிவப்பு மற்றும் கபில நிற உணவுகளை உட்கொள்ளாது விடுவதால் வாந்தி, மல வெளியேற்றத்தின்போது குருதி வெளியேறுகின்றதா என்பதை இனங்காண்பது இலகுவாக இருக்கும்.

### நுளம்பு கடிக்கும் நேரம்

இந்த டெங்கு நுளம்புகள் பெரும்பாலும் வீட்டுக்கு வெளியே உள்ள பற்றைகள் புதர்கள் செடிகளில் தங்கியிருக்கும். காலை 6 மணிமுதல் 9 மணிவரையும் மற்றும் மாலை 3 மணிமுதல் 6 மணி வரையுமே அதிகளவில் கடிக்கின்றன. எனவே இந்த பொழுதுகளில் நாம் நுளம்பு வலையையோ, நுளம்பு விரட்டிகளையோ பாவிக்க முடியாதவர்களாக இருப்போம். ஏனெனில் வீட்டுக்கு வெளியே பாடசாலை, கல்விநிலையம், விளையாட்டு மைதானம் மற்றும் வெளி வேலைகளில் இருக்கும் நேரம் இதுவாகும்.

எனவே நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க உடலை முழுவதுமாக மூடும் ஆடைகளை அணிதல், வெளித்தெரியும் பாகங்களுக்கு நுளம்பு விரட்டி ஆகிய புல் எண்ணையை (சித்திரனல்லா எண்ணை) பூசுதல் வேண்டும்.

### நுளம்புப் பெருக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது

நுளம்புகள் முட்டையிடும் நீர்தேங்கக்கூடிய இடங்களை அழித்து அல்லது அகற்றி குடம்பிகளைக் கட்டுப்படுத்துவதே சிறந்ததும் வினைத்திறனுடையதுமான கட்டுப்பாடாகும். இதற்காகப் பிளாஸ்ரிக் கோப்பைகள், தகரப்பேணிகள், போத்தல்கள், தேங்காயச் சிரட்டைகள் போன்றவற்றை அகற்றி நீர்தேக்கங்களை இல்லாது செய்தல் வேண்டும். நீர் சேமிக்கும் தாங்கிகள் பீப்பாய்கள் கிணறுகள் வாளிகள் மற்றும் கழிவறை நீர் அடைப்புப் பகுதிகளை நுளம்புகள் உட்புகாதவாறு மூடிவைத்தல் வேண்டும்.

கூரைப்பீலிகள், பூச்சாடிகள், குளிர்சாதனப் பெட்டித் தட்டுக்கள், பறவைகள் குளிக்கும் மற்றும் நீரருந்தும் தடாகங்களை வாரமொருமுறை சுத்தம் செய்தல் வேண்டும். குறிப்பாக நீர் தேங்கியுள்ள கொள்கலன்களின் உட்சுவர்கள் உராஞ்சிக் கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும். மீள்பாவனைக்கு உட்படுத்தக்கூடிய டயர்கள், வீல்பரோக்கள், நிறப்பூச்சு வாளிகள் மற்றும் ஏனைய பாவனைப் பொருள்களை நீர்புகாத இடங்களில் சேமித்துவைத்தல் வேண்டும்.

***கட்டுரையாளர்:பொது சுகாதார பரிசோதகர் பருத்தித்துறை***

கார்த்திகை - 01-30

**வடக்கு மாகாண மரநடுகை மாதம்**

"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய பழ மரங்களைக் கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்"

- கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தட்டிக்கழிக்காமல் சரியானதைத்தெரியுங்கள்

இலங்கையின் 8ஆவது அரசதலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு இன்று காலை 7 மணிக்குத் தொடங்குகின்றது. மாலை 5 மணி வரையும் தொடர்ந்து வாக்களிக்கலாம். வழக்கத்தைவிட வாக்களிக்கும் நேரம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு மாதத்திற்கு மேற்பட்ட தீவிரமான பரப்புரைகள், தேர்தல்அறிக்கைகள்என்பவற்றை கேட்டும், பார்த்தும்யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதை ஏற்கனவே முடிவு செய்திருப்பார்கள் வாக்காளர்கள். இது கொழும்பின் அரச தலைவர் தேர்தல், இதில் நாம் ஏன் வாக்களிக்கப்போக வேண்டும் என்று நினைத்து நின்றுவிடாமல் வாக்களிப்பதற்குத் தகுதியுள்ள அனைவரும் வடக்கில் வாக்களிக்க வேண்டியது அவசியம்.

எந்தவொரு முடிவையும் தமிழர்கள் ஒற்றுமையோடு கூடி எடுப்பதுவே தமது இனத்தைப் பாதுகாப்பதற்கு அவர்கள் செய்யக்கூடிய மிகப்பெரிய செயல். யாருக்கு வாக்களிப்பது என்பது அவரவர் விருப்பு இந்த ஜனநாயக நாட்டிலே. அடக்குமுறையற்ற ஜனநாயகம் தொடரவேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமும். எனவே அந்த ஜனநாயகத் தொடர்ச்சியை முன்கொண்டு செல்வதற்கு அனைவரும் வாக்களிக்க வேண்டியது கட்டாயம்.

நேரகாலத்துடன் காலையிலேயே சென்று வாக்களிப்பது பல வழிகளிலும் சிறந்தது. குறிப்பாகக் காலையிலேயே வாக்களிப்பது கள்ள வாக்குகள் போடப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

5 வருடங்களுக்கு ஒருமுறை வரும் ஜனநாயகக் கடமையைச் சரிவர நிறைவேற்றாமல்விட்டுவிட்டு ஆட்சியாளர்களையும் ஆட்சி முறைமையையும் குறைகூறுவதில் பயனில்லை. சரியானவரைத் தேர்வு செய்வதன் மூலம், ஜனநாயகத்தையும் மக்களுக்குநன்மைபயக்கும் ஆட்சியையும் பேணுவது முக்கியம்.


வரலாற்றிலிருந்து எவருமே எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்வதில்லை என்பதைத்தான் வரலாறு மிக முக்கிய பாடமாகத் தந்து வந்திருக்கிறது. இருந்தாலும் கடந்தகால வரலாறு ஆசானாக இருந்து எமக்கு வழிகாட்ட முடியும். ஏனெனில் எதிர்காலம் என்னவென்று தெரியாதிருக்கும் போது கடந்த காலம் தெரிந்ததாக இருக்கின்றது. ஆகவே கடந்த காலத்தை மனதில் இருத்தி , எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் அதன் செல்வாக்கு என்ன என்பதைக் கணித்தறிந்து நடக்கவேண்டியது தமிழர்கள் ஒவ்வொருவருடையதும் கடமை.

70 ஆண்டுகளுக்கும் மேலாக இழுபறிப்படும் அரசியல் தீர்வு விவகாரம் விரைவில் முடிக்கப்படவேண்டும், சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், மக்களின் சொந்தக் காணிகள் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்படவேண்டும், போரில் காணாமலாக்கப்பட்டவர்களின் கதி அறியப்படவேண்டும், போர்க் குற்றங்களுக்கு நீதி கிடைக்கவேண்டும், வடக்கு கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்தப்படவேண்டும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படவேண்டும், எவருக்கும் குறைவில்லாத சமத்துவமான மதிப்புமிகுந்த வாழ்க்கை ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று நீண்டு செல்லும் பட்டியலைச் சீர்தூக்கிப் பார்த்து, தமக்காக மட்டுமன்றி ஒட்டுமொத்த இனத்துக்காகவும் சமூகத்திற்காகவும் கொஞ்சம் சிந்தித்து வாக்குகளை அளிக்கவேண்டும்.

பலரிடம் பல தெரிவுகள் இருக்கலாம், ஆனால் பெரும்பான்மையினர் எந்த முடிவை எடுக்கின்றார்களோ அதுவே நடைமுறைச்சாத்தியமானதாக இருக்கின்றது. எனவே பெரும்பான்மையை மேலும் பலப்படுத்துவது இனத்தின் விடிவைத் துரிதப்படுத்துவதற்கு உந்து சக்தியாக இருக்க முடியும் என்பதையும் கவனத்தில் கொண்டு வாக்களியுங்கள்.

ஜனநாயகத்தின் மிகப் பெரிய பலம் வாக்கு. ஜனநாயகத்தைக்காக்க வேண்டுமானால் மக்கள்– வாக்காளர்கள் தமது வாக்குகளைச் செலுத்த வேண்டும்.

# பூமிக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை!



'புலி வருது, புலி வருது' என்று சொல்லிச் சொல்லி, இப்போது வந்தேவிட்டது. ஆம்! 153 நாடுகளிலுள்ள 11 ஆயிரத்து 259 அறிவியலாளர்கள் சேர்ந்து, பருவநிலை நெருக்கடியை அறிவித்திருக்கிறார்கள். இவர்களில் இந்தியாவைச் சேர்ந்த 69 அறிவியலாளர்களும் அடங்கும். 'பெரிய அளவிலான மாற்றம் ஏதும் உலக சமூகத்தில் ஏற்படவில்லை என்றால், பருவநிலை காரணமாகச் சொல்ல முடியாத துயரத்தை அனுபவிக்கப் போகிறோம்' என்று எச்சரித்திருக்கிறார்கள்.

இந்த நெருக்கடிநிலை அறிவிப்பானது 'பயோசயின்ஸ்' என்ற இதழில் வெளியாகியிருக்கிறது. 1979ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடந்த பருவநிலை மாநாட்டின் 40ஆவது ஆண்டு நிறைவில் இந்த அறிக்கை வெளியாகியிருக்கிறது. எரிசக்தி, மின்சக்தி போன்றவற்றின் நுகர்வு, புவியின் மேற்பரப்பின் வெப்பநிலை, மக்கள்தொகைப் பெருக்கம், காடழிப்பு, துருவப் பகுதிகளில் பனிப்பாறைகள் உருகுவது, மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு போன்றவற்றில் கடந்த 40 ஆண்டுகளில் கிடைத்த தரவுகளைக் கொண்டு இந்த அறிக்கையை அறிவியலாளர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். "40 ஆண்டு காலமாக எவ்வளவோ பேசியிருக்கிறோம். ஆனால், இது குறித்து அரசுகள் எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை. எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதைப் போலவே அரசுகள் நடந்துகொள்கின்றன" என்கிறார்கள் இந்த அறிவியலாளர்கள்.

### வெறும் சொற்கள் அல்ல

பருவநிலை மாற்றம், புவி வெப்பமாதல் என்ற சொற்கள் எமக்கிடையே புழங்க ஆரம்பித்து, கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் ஆகின்றன. இந்தச் சொற்களெல்லாம் வெறுமனே பூச்சாண்டி காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுபவை அல்ல நிலைமையின் தீவிரத்தை உணர்த்துபவை. இந்தக் கோட்பாடுகளெல்லாம் கட்டுக்கதை என்று இன்னமும் சொல்லும் ட்ரம்ப் போன்ற உலகத் தலைவர்கள் பலரும் உண்டு. இவையெல்லாம் கட்டுக்கதைகள் அல்ல உண்மை. புவி வெப்பமாதல், பருவநிலை மாற்றம் ஆகியவற்றின் வெளிப்படையான அறிகுறிகளை அறிவியலாளர்கள் கண்டறிந்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள்..

தரைப் பரப்பின் மேலுள்ள காற்றின் வெப்பநிலை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. கடல் மேல் உள்ள காற்றின் வெப்பநிலையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆர்க்டிக் கடலின் பனிப் பாறைகள் உருகிக்கொண்டிருக்கின்றன பனியாறுகளும் உருகிக்கொண்டிருக்கின்றன. கடல்மட்டம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. காற்றில் ஈரப்பதமும் தேவைக்கு அதிகமான அளவில் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

இவ்வளவு காரணங்களால் பருவநிலைய்யில் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உரிய நேரத்தில் மழை பொழிவதில்லை. காலம் தவறிப் பெருமளவு மழை பொழிகிறது. ஓர் இடத்தில் தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்றால், இன்னொரு இடமோ அதிக மழை காரணமாகத் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இவை எல்லாமே நம் கண் முன்னுள்ள உதாரணங்கள்.

கார்பன் டை ஆக்ஸைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற பசுங்குடில் வாயுக்களின் வெளியேற்றம் பருவநிலை மாற்றத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்த வாயுக்களை அதிக அளவில் வெளியிடுவதில் சீனாவுக்குத்தான் முதலிடம். 2016ஆம் ஆண்டில் சீனா 9 ஆயிரத்து 56 மெட்ரிக் தொன் கார்பன் டை ஆக்ஸைடை வெளியிட்டிருக்கிறது. அமெரிக்கா 4 ஆயிரத்து 833 மெட்ரிக் தொன்னுடன் இரண்டாவது இடத்திலும், இந்தியா 2 ஆயிரத்து 76.8 மெட்ரிக் தொன்னுடன் மூன்றாவது இடத்திலும் இருக்கின்றன. இவ்வளவு கரிமத்தையும் நம் வளிமண்டலம் எப்படித் தாங்கும் என்ற சிந்தனையே இல்லாமல் நாம் உமிழ்ந்துகொண்டிருக்கிறோம்.

புவியின் தட்பவெப்ப நிலையைப் பராமரிப்பதில் காடுகளுக்கும் அவற்றில் உள்ள மரங்களுக்கும் முக்கியப் பங்குண்டு. தற்போதைய பருவநிலை நெருக்கடிக்குக் காடழிப்பும் ஒரு காரணம். அமேசான் காட்டையே எடுத்துக் கொண்டால், அது ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் சதுர மைல் அளவுக்கு அழிந்துவிடுகிறது. ஏற்கெனவே, 20 வீதம் காட்டுப் பரப்பை இழந்திருக்கிறது.

ஒவ்வொரு நாளும் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவுக்கு இந்தக் காடுகள் எரிந்துபோகின்றன அல்லது எரிக்கப்படுகின்றன. "தற்போதைய காட்டழிப்பு விகிதம் தொடருமானால் 2030 ஆம் ஆண்டுக்குள் 27 வீதமான வனப்பரப்பை அமேசான் இழந்துவிடும்" என்று ஐநாவின் உலக இயற்கை நிதியம் முன்பே எச்சரித்தும் காட்டழிப்பு இதே வேகத்தில் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

இதற்கு முன்பும் புவியானது புவி வெப்பமாதலை எதிர்கொண்டிருக்கிறது. முந்தைய புவி வெப்பமாதல் 5.5 கோடி ஆண்டுகளுக்கு

முன்பு நிகழ்ந்தது. அதற்கு, எரிமலை வெடிப்பு உள்ளிட்ட இயற்கையான சம்பவங்கள்தான் காரணம். அப்போது பல்வேறு உயிரினங்கள் கூண்டோடு அழிந்தன. தற்போதைய புவி வெப்பமாதலானது மனிதர்களால் தூண்டப்பட்டது.

இதற்கு நாம் வாழும் முறையே காரணம். தொழில் புரட்சி ஏற்பட்ட பிறகு, மனித குலம் நுகர்வுப் பசிக்கு ஆளாக்கப்பட்டது. உணவு நுகர்வு, எரிபொருள் நுகர்வு, பிற பண்டங்களின் நுகர்வு என்று வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மனிதர்கள் நுகர ஆரம்பித்தார்கள். இதற்கான விலையைத்தான் தற்போது புவி கொடுத்துக் கொண்டிருக்கிறது.

**மாறான வேகத்தில் நெருக்கடி**

"புவிக் கோளானது பருவநிலை நெருக்கடியை எதிர்கொண்டிருக்கிறது என்று நாங்கள் தெளிவாகவும் சந்தேகத்துக்கு இடமில்லாமலும் அறிவிக்கிறோம். வளம் குன்றா ஒரு எதிர்காலத்தைப் பெறுவதற்கு நாமெல்லோரும் வாழும் முறையை மாற்றிக்கொள்ள வேண்டும். இழப்பதற்கு இனி எம்மிடம் நேரமில்லை. பருவநிலை நெருக்கடி வந்துவிட்டதோடு அல்லாமல் பெரும்பாலான அறிவியலாளர்கள் எதிர்பார்த்ததற்கும் மாறான வேகத்தில் அந்த நெருக்கடி அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எதிர்பார்த்ததைவிட தீவிரமாக இருக்கும் இது, இயற்கையின் சூழல் மண்டலங்களையும் மனித குலத்தின் விதியையும் அச்சுறுத்துகிறது" என்கிறது அறிவியலாளர்களின் அறிக்கை.

பருவநிலை நெருக்கடியின் விளைவுகள் வேறு எங்கோ ஏற்பட்டுக்கொண்டிருக்கவில்லை. இங்கே நம் கண் முன் கூட நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. முப்போகம் விவசாயம் என்று பெருமையடித்துக்கொண்டிருந்த காலம் போய், தற்போது ஒரு போகத்துக்கே நம் விவசாயிகள் திண்டாடிக் கொண்டிருப்பதும் பருவ மாற்றத்தின் விளைவுதான்.

> ஆண்டுக்கு 2.5 லட்சம் பேர் பருவநிலை மாற்றத்தின் காரணமாக இறந்துகொண்டிருக்கிறார்கள். போகப் போக இறப்பு விகிதம் மேலும் அதிகரிக்கும். இந்த அளவுக்கு நம் முன்னே பூதமாக வந்து பருவநிலை நெருக்கடி நின்றுகொண்டிருக்கும்போது, நாம் வழக்கமாக நம் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனால்தான், உலக நாடுகளின் தலைவர்கள் மீது சமீபத்தில் சிறுமி கிரேட்டா தன்பர்க் ஐ.நாவில் நடந்த மாநாட்டில் சீறியிருந்தார். அப்போது ஏதோ ஆர்வக் கோளாறால் பேசுகிறார் என்ற அளவில் அவரைப் பலரும் கிண்டலடித்திருந்தனர். அந்தச் சிறுமியின் கோபத்தை நியாயப்படுத்தும் விதத்தில் தற்போது பருவநிலை நெருக்கடி அறிவிக்கப்பட்டிருக்கிறது.




இவ்வளவு ஏன், 2050 ஆம் ஆண்டில் சென்னையின் கடற்கரையோரம் இருக்கும் பகுதிகள் மூழ்கும் அபாயம் இருப்பதாக ஒரு ஆய்வொன்று சமீபத்தில் எச்சரித்திருக்கிறது.

ஆண்டுக்கு 2.5 லட்சம் பேர் பருவநிலை மாற்றத்தின் காரணமாக இறந்துகொண்டிருக்கிறார்கள். போகப் போக இறப்பு விகிதம் மேலும் அதிகரிக்கும். இந்த அளவுக்கு நம் முன்னே பூதமாக வந்து பருவநிலை நெருக்கடி நின்றுகொண்டிருக்கும்போது, நாம் வழக்கமாக நம் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனால்தான், உலக நாடுகளின் தலைவர்கள் மீது சமீபத்தில் சிறுமி கிரேட்டா தன்பர்க் ஐ.நாவில் நடந்த மாநாட்டில் சீறியிருந்தார். அப்போது ஏதோ ஆர்வக்கோளாறால் பேசுகிறார் என்ற அளவில் அவரைப் பலரும் கிண்டலடித்திருந்தனர். அந்தச் சிறுமியின் கோபத்தை நியாயப்படுத்தும் விதத்தில் தற்போது பருவநிலை நெருக்கடி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**என்ன செய்யலாம்?**

சரி, நாம் என்ன செய்ய வேண்டும்? அதற்கும் தீர்வை அறிவியலாளர்கள் இந்த அறிக்கையில் முன்வைக்கிறார்கள். மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும், படிம எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும், காட்டழிப்பை நிறுத்த வேண்டும், இறைச்சி உண்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும், நுகர்வில் நிதானம் தேவை. இப்படியெல்லாம் செய்தால்தான் எதிர்காலத்தை எங்களுக்கு விட்டுவையுங்கள் என்று கேட்கும் கிரேட்டா தன்பர்கின் தார்மீகத்தை நாம் எதிர்கொள்ள முடியும்.

இந்தப் புவிதான் நமக்கு இருக்கும் ஒரே வாழிடம். இதைத் தாண்டியும் வேறு ஏதாவது கோள்கள் உயிர் வாழ்க்கைக்கு ஏதுவாக இருக்கின்றனவா என்றதேடல் சூரியக்குடும்பத்தினுள்ளும் சூரியக் குடும்பத்தின் வெளியிலும் பல தசாப்தங்களாக நடைபெற்றுவருகின்றன.

நமது பால்வீதி மண்டலத்தில் மட்டும் பத்தாயிரம் கோடி கோள்கள் இருக்கலாம் என்று கூறப்படுகிறது. புலப்பட க்கூடிய பிரபஞ்சத்தில் 1,000,00,00,000,00,00,000, 00,00,000 கோள்கள் இருக்கலாம் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இத்தனை கோள்களில் உயிர் வாழ்க்கைக்கான சாத்தியங்களைக் கொண்ட கோள்கள் கோடிக் கணக்கில் இருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும், உயிர் வாழ்க்கை சாத்தியப்பட்டதாக எமக்குத் தெரிந்த ஒரே கோள் புவிதான். அப்படிப்பட்ட அரிதான கோளை நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்ற கேள்வியைத் தற்போது பருவநிலை நெருக்கடி அறிவிக்கப்பட்டிருக்கும் சூழலில் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.




டெங்கு நோய் பற்றி உங்களுக்குத் தெரியுமா?



நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்

- கை, கால்களை அதிகமாக மறைக்கும் வண்ணம் ஆடைகளை அணிதல் வேண்டும்.
- ஓய்வாக உள்ள நேரங்களில் நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல் வேண்டும்.
- உடம்புக்கு நுளம்புகளை விரட்டக்கூடிய மணமுள்ள மருந்துகள், எண்ணெய்களை பூசுவதன் மூலம் நுளம்புக்கடியைத் தவிர்க்கலாம்.



மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

# ஒரு வாக்காளருக்கு 344 ரூபா: தேர்தல் ஆணைக்குழு செலவு

கொழும்பு, நவ.16

இன்று நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலுக்கான மொத்த செலவு 5 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா எனவும், ஒரு வாக்காளருக்காக இந்தமுறை தேர்தல்கள் ஆணைக்குழுவால் 344 ரூபா செலவிடப்படுகின்றது என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை அரச தலைவர் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்கள் அனைவரும் தேர்தல்ப் பரப்புரைக்குச் செலவிட்டதாக மதிப்பிடப்படும் மொத்த தொகை 10 ஆயிரம் மில்லியன் ரூபாவாகும். ஒரு வாக்காளர் தொடர்பில் வேட்பாளர்கள் செலவிட்ட தொகை 625 ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ தகவல்களின்படி, கடந்த 2005 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின் மொத்தச் செலவு 715 மில்லியன் ரூபாவாகும். அப்போது ஒரு வாக்காளருக்கு செலவிடப்பட்ட தொகை 54 ரூபாவாகும். 2010ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலுக்காக ஆயிரத்து 856 மில்லியன் ரூபாவை தேர்தல்கள் திணைக்களம் செலவிட்டுள்ளது.

அதன்படி வாக்காளர் ஒருவருக்கு 132 ரூபா செலவாகியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 706 மில்லியன் ரூபாவை தேர்தல்கள் திணைக்களம் அரச தலைவர் தேர்தலுக்காக செலவிட்டுள்ள நிலையில், அப்போது ஒரு வாக்காளருக்காக 180 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்த முறை அரச தலைவர் தேர்தல் செலவீனம் 5 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. வாக்காளர் ஒருவருக்கான செலவு 344 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த முறை அரச தலைவர் தேர்தலுக்காக வேட்பாளர்களும் தேர்தல்கள் ஆணைக் குழுவும் ஒரு வாக்காளருக்காக செலவிட்ட மொத்தச் செலவு 965 ரூபாவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அரச தலைவர் தேர்தல் கண்காணிப்பு ஆரம்பம்

கொழும்பு, நவ.16

அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு நாட்டுக்கு வந்துள்ள வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் மற்றும் உள்நாட்டுக் கண்காணிப்பாளர்கள் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

தமது அழைப்பின் பேரில் நாட்டுக்கு வந்துள்ள 17 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த 88 கண்காணிப்பாளர்களும் தெற்காசிய தேர்தல் அதிகாரிகள் அமைப்பின் 20 கண்காணிப்பாளர்களும் பொதுநலவாய அமைப்பின் 15 தேர்தல் கண்காணிப்பாளர்களும் சுதந்திர தேர்தலுக்கான ஆசிய வலய கண்காணிப்பாளர்கள் 45 பேரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

தமது அமைப்பை சேர்ந்த 3 ஆயிரம் பேர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் என்று தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார். (எ)

## போக்குவரத்துக் கட்டணம் தேர்தலுக்காகக் குறைப்பு

கொழும்பு, நவ.16

அரச தலைவர் தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊர் செல்லும் மக்களுக்காகச் சிறப்புப் பேருந்துச் சேவை ஏற்பாடு செய்யப்படது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி பி.எச்.ஆர்.ஜே சந்திரசிறி தெரிவித்தார்.

5 ஆயிரத்து 800 பேருந்துகள் போக்குவரத்தில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளன கொழும்பில் இருந்து ஆயிரத்து 500 சிறப்புப் பேருந்துச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அதிவேக நெடுஞ்சாலைகளில் பேருந்துக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 10 ரூபாவுக்கும் 20 ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகையில் இந்த கட்டண சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படுகின்றது.

மாகும்புரயில் இருந்து காலி வரையான கட்டணம் 420 ரூபாவிலிருந்து 410 ரூபாயாக குறைக்கப்பட்டது. மாகும்புரயில் இருந்து மாத்தறை வரையான கட்டணம் 530 ரூபாவிலிருந்து 520 ரூபாயாக குறைக்கப்பட்டது. கொழும்பில் இருந்து மாத்தறை வரையான கட்டணம் 580 ரூபாவிலிருந்து 570 ரூபாவாகக் குறைக்கப்பட்டது. (எ)

## ஐ.தே.க. உறுப்பினரின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, நவ.16

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த சிசிர குமார அபேசேகரவின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது. பிணை நிபந்தனையை மீறிய குற்றச் சாட்டின் பேரில், சாந்த சிசிர குமார அபேசேகர கைது செய்யப்பட்டு நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று அவர் மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு, சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி வைத்திருந்தமை தொடர்பாக சிலாபம் மேல் நீதிமன்றத்தில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி அவருக்கு பிணை வழங்கப்பட்டதுடன், ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடைப்பட்டதொரு நேரத்தில் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது.

2018ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி, பிரதிவாதியின் தரப்பினரால் சிலாபம் மேல் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைக்கு அமைய, வாராந்தம் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டது. ஒவ்வொரு மாதாந்தத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை, சிலாபம் பொலிஸ் நிலையம் வந்து கையொப்பமிட வேண்டும் என நீதிமன்றம் அறிவித்திருந்தது.

அவர் நிபந்தனையை மீறியிருக்கின்றார் என்று நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையிலேயே கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (எ)

## போக்குவரத்து சேவை நிலையங்களில் நெருக்கடி

கொழும்பு, நவ.16

அரச தலைவர் தேர்தல் இன்று நடக்கவுள்ள நிலையில் வாக்களிப்பதற்காக தமது சொந்த இடங்களுக்கு பெருந்திரளான மக்கள் நேற்றுப் பயணித்தனர். அதனால் நேற்றுக் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம், மத்திய பேருந்து நிலையம், பெஸ்டின் மாவத்தை மற்றும் குணசிங்கபுர தனியார் பேருந்து நிலையங்களில் பெருந்திரளான மக்கள் கூடினர்.

தேர்தல் காரணமாக தனியார் பேருந்துகளின் சேவைகள் குறைந்த அளவில் காணப்படுமென்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்திருந்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 150 பேருந்துகள் நேற்றும் இன்றும் மேலதிக சேவைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று அந்தச் சபையின் தலைமை அதிகாரி நிஹால் நிதெல்லாராய்ச்சி தெரிவித்திருந்தார்.

அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு ரயில் சேவைகள் வழமைப் போல இயக்கப்படவுள்ளதாக ரயில் கண்காணிப்பாளர் வஜிர பொல்வத்தகே தெரிவித்துள்ளார். (எ)

## ஐந்து பேர் கைது

கொழும்பு, நவ.16

குழப்ப நிலையை ஏற்படுத்தும் விதமாக செயற்பட்ட 5 பேர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் ரம்புக்கன, பன்தம்பிட்டிய பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து போரா 12 வகை துப்பாக்கி ஒன்றும் வாள் மற்றும் துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடிகமுவ, யட்டுவெல்தெனிய மற்றும் வகாவ பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (எ)



## சுவரொட்டி வைத்திருந்த ஒருவர் கைது

கொழும்பு, நவ.16

மாதம்பே பகுதியில் அரச தலைவர் வேட்பாளர்களை விளம்பரப்படுத்தும் சுவரொட்டிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து அரச தலைவர் தேர்தலில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களை விளம்பரப்படுத்தும் நோக்கில், அவர்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய சுவரொட்டிகள் மற்றும் கையேடுகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிடைத்த தகவலுக்கு அமைய நேற்றுக் காலை சிலாபம் - மாதம்பே பகுதியிலுள்ள சந்தேகநபரின் வீட்டை சோதனைக்குட்படுத்திய போது 3 ஆயிரம் 850 சுவரொட்டிகள் மற்றும் கையேடுகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, நவ.16

இரத்தினபுரிப் பகுதியில் ஒரு தொகை கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து கேரள கஞ்சா 5 கிலோ 200 கிராம் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இரத்தினபுரி, மாரப்பன பகுதியை சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)


மன்னார்


யாழ்ப்பாணம்


வவுனியா


கிளிநொச்சி


முல்லைத்தீவு

# கடும் பாதுகாப்புடன் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்ட வாக்குப்பெட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.16

நேற்றுக் காலை கடும் பாதுகாப்புடன் வாக்குப் பெட்டிகள் வாக்குச் சாவடிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

2 ஆயிரத்து 845 மத்திய நிலையங்கள் ஊடாக இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

அரச தலைவர் தேர்தல் நடவடிக்கைகளுக்காக சுமார் மூன்று இலட்சம் அரச அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அரச தலைவர் தேர்தலில் 1 கோடியே 59 லட்சத்து 92 ஆயிரத்து 096 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நாளை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாண மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து நேற்றுக் காலை 8 மணியில் இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் 531 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 75 ஆயிரத்து 176 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்கு பெட்டிகள் அரச பணியாளர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து செல்லப்பட்டன.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப் பெட்டிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் இருந்து நேற்றுக்காலை எடுத்துச் செல்லப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில் 100 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**வவுனியா**

வவுனியா மாவட்டத்தில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்றுக் காலை வவுனியா மாவட்டச் செயலகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் 142 வாக்களிப்பு நிலையங்களில் ஒரு லட்சம் 17 ஆயிரத்து 333 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் மாவட்ட செயலகத்தில் இருந்து பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து செல்லப்பட்டுள்ளன.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்கு பெட்டிகள் அரச பணியாளர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து செல்லப்பட்டன.

**மன்னார்**

மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள 76 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் கொண்டுச் செல்லும் நடவடிக்கைகள் நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பமானது.

நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அரச மற்றும் தனியார் பேருந்துகளில் பலத்த பாதுகாப்புடன் வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் இந்தமுறை தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஆயிரத்து 365 அரச அலுவலகர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அரச தலைவர் தேர்தலில் வாக்களிப்பதற்கு முன்னார் மாவட்டத்தில் 89 ஆயிரத்து 403 பேர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

**அம்பாறை**

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப் பெட்டிகள் அம்பாறை ஹாடி உயர் தொழில் நுட்ப வளாகத்தில் இருந்து நேற்றுக் காலை பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டன.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்றுக் காலை அனுப்பி வைக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 ஆண் பெண் வாக்களிப்பு நிலையங்கள் உட்பட 428 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

**புத்தளம்**

புத்தளம் மாவட்டத்தில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப் பெட்டிகள் புத்தளம் சென். அன்றூஸ் மத்திய கல்லூரி, பாத்திமா மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இருந்து வழங்கப்பட்டன.

புத்தளம், ஆனமடு, சிலாபம் வென்னப்புவ மற்றும் நாத்தாண்டி ஆகிய ஐந்து தேர்தல் தொகுதிகளிலும் ஐந்து இலட்சத்து 99 ஆயிரத்து 42பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். அவர்கள் வாக்களிப்பதற்காக 411 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**திருகோணமலை**

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப் பெட்டிகள் திருகோணமலை தொழிநுட்பக் கல்லூரியில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 2 லட்சத்து 81 ஆயிரத்து 114 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்கள். அவர்களது வாக்குப் பதிவுக்காக 307 வாக்களிப்பு நிலையங்கள் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

**மலையகம்**

மலையகத்திலும் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குப் பெட்டிகள் வாக்குச் சாவடிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

நுவரெலியா மாவட்டத்தில் காமினி சிங்கள வித்தியாலயத்திலிருந்து வாக்குச் சாவடிகளுக்கு வாக்குப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

பதுளை மாவட்டத்துக்கான வாக்குப் பெட்டிகள் பதுளை மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.
(எ-106,6,105,56,213,110,ரி4,60,35)

# ஜனநாயகக் கடமையை சரிவர நிறைவேற்றுங்கள்

## சிவில் அமைப்பு கோரிக்கை

கொழும்பு,நவ.16

இன்று நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் வாக்குரிமையுள்ள சகலரும் வாக்களித்து தங்கள் ஜனநாயகக் கடமையைச்சரிவர நிறைவேற்ற வேண்டும் என்று சிவில் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மலையக உரிமைக் குரல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வாக்குரிமை மூலம் மக்கள் இறைமையைப் பாதுகாக்கப்படுவதற்கான அதிகாரம் மக்களுக்கு உரித்தாகின்றது. ஆகவே, அந்த உரிமையை உரிய வகையில் பயன்படுத்த வேண்டும். இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இறுதி நேரம் வரை காத்திருக்காது, நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்குமாறு வாக்காளர்களிடம் கோரிக்கை விடுப்பதுடன், வாக்களிப்பு நிலையம் செல்வதற்கு முன்னர், வாக்களிப்பதற்குத் தேவையான ஆவணங்கள் கைவசம் உள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். நீங்கள் யாருக்கு வாக்களிக்கின்றீர்கள் என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. எனவே, அச்சுறுத்தல்கள், அழுத்தங்களுக்கு அடிபணியாமல் சுதந்திரமான முறையில், மனசாட்சியின் பிரகாரம் வாக்களிக்கலாம். அந்த உரிமையைப் பறிப்பதற்கு எவராவது முயற்சித்தால் பாதுகாப்பு தரப்பினரிடம் முறையிடுங்கள். தொழிலுக்காக கொழும்பு உட்பட ஏனைய பகுதிகளில் வாழும் மலையக மக்களுக்கு, வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்காக விடுமுறையை வழங்குமாறு தொழில் வழங்குநர்களிடம் கோரிக்கை விடுப்பதுடன், அத்தகைய ஏற்பாட்டை செய்து கொடுப்பதற்கு முன்வந்தவர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தேர்தல் சட்ட திட்டங்களை மீறாது, வன்முறைகளில் ஈடுபடாது, நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். - என்றுள்ளது.

(க-22)

# நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை 120 முறைபாடுகள்

நுவரெலியா,நவ.16

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை 120 முறைபாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் தேர்தல் நடவடிக்கைகள் சுமூகமான நிலையில் நடைபெறுகின்றன என்று நுவரெலியா மாவட்டச் செயலர் எம்.பீ.ஆர். புஷ்பகுமார தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுவரெலியா மாவட்டத்தில் 5 இலட்சத்து 69 ஆயிரத்து 28 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக நுவரெலியா மாவட்டத்தில் 488 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த நிலையங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்புகளுடன் வாக்குச்சீட்டுகளும், வாக்குப்பெட்டிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மஸ்கெலியா தொகுதியில் 256 வாக்குசாவடிகளும், கொத்மலைத் தொகுதியில் 81 வாக்குசாவடிகளும், வலப்பனைத் தொகுதியில் மூன்று இடங்களில் இரட்டை வாக்குச் சாவடிகள் உட்பட 76 வாக்குச் சாவடிகளும், ஹங்குராங்கெத்த தொகுதியில் 75 வாக்குச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்குகளை எண்ணுவதற்காக நுவரெலியா காமினி தேசியக் கல்லூரியில் 39 வாக்கு எண்ணும் நிலையங்களும், நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் தபால் வாக்குகள் எண்ணுவதற்காக 9 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் 6 ஆயிரத்து 800 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்புக்காக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸாரும் ஆயிரத்து 590 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் தபால் வாக்காளர்களாக 18 ஆயிரத்து 124 பேர் தகுதி பெற்றுள்ளனர். தேர்தல் நடவடிக்கைக்காக 522 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதில் 350 தனியார் வாகனங்களும், 172 அரச வாகனங்களும் அடங்குகின்றன. - என்றார்.

(க)

# அத்துமீறி தேர்தல் பரப்புரை இளைஞன் கைது

கொழும்பு,நவ.16

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், அதனைக் கருத்தில் கொள்ளாது பரப்புரையில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் தும்மலசூரியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தும்மலசூரிய வீரகொடியானப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.


வீரகொடியான பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மாதம்பைப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் பாதுகாவலராகப் பணிபுரிந்து வருபவர் என்றும் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சந்தேகநபரிடமிருந்து 155 துண்டு அறிக்கைகளும், 30 கடித உறைகளும் மற்றும் உந்துருளி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. தும்மலசூரியப் பொலிஸார் சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-22)

# தேர்தல் பணிகளுக்காக 101 வாகனங்கள் ஏற்பாடு

மன்னார்,நவ.16

தேர்தல் நடவடிக்கைகளுக்கு 101 அரச, தனியார் வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தேர்தலுக்கான சகல விதமான ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன் றாஸ் தெரிவித்தார்.



மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் 76 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து ஆகக்கூடிய தூரத்தைக் கொண்ட வாக்களிப்பு நிலையமாக 90 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இரணை இலுப்பைக்குளம் வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ளது. மன்னார் வடக்குப் பகுதியில் வெள்ளாங்குளம் வாக்களிப்பு நிலையம் 45 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. தெற்குத்திசையில் மருச்சிக்கட்டி வாக்களிப்பு நிலையம் 60 கிலோ மிற்றர் தொலைவில் அமைந்துள்ளது. ஏனைய வாக்களிப்பு நிலையங்கள் அனைத்தும் அதற்கு உட்பட்டதாக அமைந்துள்ளது.

வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. தேர்தலில் வாக்களிக்க 89 ஆயிரத்து 403 பேர் தகுதி பெற்று 76 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கவுள்ளனர். வாக்கு எண்ணும் நிலையங்கள் 8 அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான கடமைகளை மேற்கொள்ள ஆயிரத்து 690 அரச அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

350 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 152 பேர் 76 வாக்களிப்பு நிலையங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் மாவட்டச் செயலகம் மற்றும் நடமாடும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை 31 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அனைத்து முறைப்பாடுகளுக்கும் தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

அதேவேளை புத்தளத்தில் உள்ள மன்னார் மாவட்ட வாக்காளர்கள் 122 பேருந்துகளில் மன்னாருக்கு வருகின்றனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியில் அவர்கள் வருகின்றனர். மாவட்டத்தில் அவ்வாறான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொள்ள வில்லை. - என்றார்.

(க-56.60.213)

# வவுனியாவில் தேர்தல் கடமைக்காக 2,155 பாதுகாப்புப் பிரிவினர் நியமனம்

வவுனியா,நவ.16

வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 333 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 142 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இதற்காக ஆயிரத்து 871 பொலிஸ் அலுவலர்கள், 142 அதிரடிப்படையினர் , 142 சிவில் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம். ஹனீபா தெரிவித்தார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, அரச தலைவர் தேர்தலுக்கான வன்னி தேர்தல் மாவட்டத்துக்குரிய, வவுனியா மாவட்டத்தில் தேர்தலுக்குரிய சகல பூர்வாங்க ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா கிழக்கில் 21 நிலையங்களும் , வவுனியாவில் 80 நிலையங்களும், வவுனியா தெற்கில் 11 நிலையங்களும், வெங்கலச் செட்டிக்குளத்தில் 25 நிலையங்களும், வெலியோயவில் 5 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வாக்களிப்பு நிலையங்களுக்காக ஆயிரத்து 728 அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட வாக்காளர்கள் நேரத்துக்கு வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று உங்களது வாக்குகளை மேற்கொள்ளுங்கள். வாக்களிப்பானது காலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மாலை 5 மணிக்கு நிறைவு பெறும்.

அவ்வாறு நிறைவு பெற்றதுடன் வாக்குப் பெட்டிகள் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு எடுத்து வரப்படுவதுடன் த பால் மூல வாக்கெண்ணும் பணிகள் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். ஏனைய வாக்கெண்ணும் பணிகள் மாலை 7 மணியிலிருந்தும் ஆரம்பிக்கப்படும் இதற்காக 20 வாக்கெண்ணும் நிலையங்கள் வவுனியா மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. - என்றார்.

(க-ரி4,110)

# இடர் வந்தால் சமாளிக்கும் மாற்று ஏற்பாடுகள் தயார்

மன்னார், நவ. 16

தேர்தல் நேரத்தில் ஏற்படும் இடர் நிலையைச் சமாளிப்பது தொடர்பான அறுபது பக்கங்களைக் கொண்ட திட்ட அறிக்கை தேர்தல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் நடராஜா திலீபன் தெரிவித்தார்.

அரசதலைவர் தேர்தலை முன்னிட்டு சகல திணைக்களத் தலைவர்களுடன் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவும் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரும் இணைந்து மாவட்டச் செயலரின் தலைமையில் தேர்தல் முன்னாயத்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதனடிப்படையில் வெள்ளம் ஏற்படக்கூடிய இடங்களில் மக்கள் வாக்களிக்கச் செல்வதில் பாதிக்கப்படும் நிலை இருந்தால் அவர்களைக் கொண்டு செல்வதற்கு உரிய நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிறைவடைந்து பெட்டிகள் கொண்டுவரும்போது பாலியாறு, அருவியாறு, மல்வத்து ஓயா பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்தால் இடர்களைச் சமாளிப்பதற்கு வான்படையினரின் வானூர்தி எங்கே இறங்க வேண்டும் என்றும் அதற்கேற்றவாறு படகு சேவைகளையும் உழவு இயந்திர சேவைகளையும் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவம், வாகனம், இராணுவம், பொலிஸ் மற்றும் இதர சேவைகள் தொடர்பான அறுபது பக்க திட்ட அறிக்கையின் பிரதிகள் தேர்தல் திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலகம் போன்றனவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையஉதவிப்பணிப்பாளர்நடராஜா திலீபன் தெரிவித்தார். (கு-213)

## பாரபட்சம் காட்டாது செயற்பட வேண்டும்

### அரச ஊழியர்களிடம் தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, நவ.16

தேர்தலின் போது எந்தவொரு நபருக்கும் சிறப்புக் கவனம் செலுத்தாமல் பாராபட்சமில்லாமல் செயற்பட வேண்டும் என்று தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அரச ஊழியர்களிடமும் தேர்தல்கள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேர்தலின் போது கீழ் மட்ட அதிகாரிகள் முதல் மேல் மட்ட அதிகாரிகள் வரையில் அவரவருக்கு வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை சரியான முறையில் நிறைவேற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு நபருக்கும் பயப்படாமல் கடமைகளில் ஈடுபடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள் ளது. (எ)

## வன்முறையில் ஈடுபட்டால் பிணை இன்றிய கைது

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 16

தேர்தல் வன்முறைகளில் இன்றையதினம் யாரெல்லாம் ஈடுபடுகின்றார்களோ அவர்கள், பொலிஸ் பிணையில் செல்ல முடியாதவாறு கைது செய்யப்படுவார்கள் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்படுபவர்களை அரச தலைவர் தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரையில் சிறைப்படுத்துமாறு பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் ஆணைக்குழுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச தலைவர் தேர்தலை சமாதானமாகவும் அமைதியாகவும் நடாத்துவதற்கே இந்த ஏற்பாடு எனவும் அவர் சுட்டிக்கா ட்டியுள்ளார்.

பொதுமக்கள் தமது பலத்தை ஆயுதங்களினாலும் வன்முறைகளினாலும் வெளிப்படுத்தாமல் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிப்பதன் மூலம் நிரூபிக்குமாறும் ஆணைக்குழுத் தலைவர் மேலும் கேட்டுள்ளார். (ம)

## வயல்களில் தண்ணீர் இல்லாததால் பெரும்போகம் பாதிக்கும் அபாயம்

யாழ்ப்பாணம்,நவ.16

காலபோகச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ள போதும், அதற்குத் தேவையான மழைநீர் கிடைக்கவில்லை என்று அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வயல்களில் தண்ணீர் வற்றியதால் பெரும்போக நெற் செய்கை பாதிக்கப்பட்டுவிடுமோ என்றும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெற்பயிர்ச் செய்கையை நம்பியே அதிகமான குடும்பங்கள் வாழ்கின்றனர். போதுமான மழைவீழ்ச்சி கிடைக்காதுபோனால் அத்தனை பேருக்கும் பெரும் இழப்பு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது.

காலபோகத்துக்கான மழை கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் பரவலாகவே யாழ்ப்பாணத்தில் பெய்தது. எனினும் கடந்த இரண்டு வாரங்களாக மழை பெய்யாததால் வயல்களில் தேங்கிநின்ற தண்ணீர் வற்றியுள்ளது. இதனால் பயிர்கள் நீரின்றிக் காணப்படுகிறன. இன்னும் சில நாள்களுக்கு இவ்வாறு மழை பெய்யாது வெயிலான காலநிலை நீடிக்குமானால் விவசாயம் பாதிக்கப்படும் என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது கூடுதலாக மேட்டுநிலங்களில் பயிரிடப்பட்ட நெற் பயிர்கள் தண்ணீர் இன்றி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளன. இந்த வாரத்தில் மழை பெய்ய வேண்டும் இல்லையேல் தாழ்ந்த நிலப் பரப்பில் செய்கையிடப்பட்ட நெற்பயிர்களும் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

(ஜ-17)

## விபத்தில் பெண் காயம்

தனியார் பேருந்தும் உந்துருளியும் மோதி விபத்துக்குள்ளானது. இதில் உந்துருளியில் பயணித்த வயதான பெண் ஒருவர் காயமடைந்தார். இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை வவுனியா நகர் சோயா வீதிப் பகுதியில் இடம்பெற்றது.

குறித்த பெண் நகரில் உள்ள ஆலயத்துக்கு சென்றுவிட்டு சோயா வீதியில் அமைந்துள்ள அவரது வீடு நோக்கி உந்துருளியில் சென்றார். முதன்மை வீதியில் இருந்து சிறுவீதியூடாக திரும்ப முற்பட்ட அவரை அதே திசையில் வவுனியாவில் இருந்துபுதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்து மோதியுள்ளது. இதனால் தூக்கிவீசப்பட்ட பெண்மணி பலத்த காயங்களுக்கு உள்ளானார்.

விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் சாரதி சில நிமிடங்கள் அப்பகுதியில் நின்றுவிட்டு பேருந்துடன் அப்பகுதியில் இருந்து அகன்று சென்றுள்ளார் என்று அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர். இந்நிலையில் வீதியால் பணித்த சிலர் காயமடைந்தபெண்ணைமீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்த்தனர்.சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா போக்குவரத்துப்பொலிஸார் [illegible]களை முன்னெடுத்துள்ளனர். (ஜ-110)

### ஊடகவியலாளர் மீது தாக்குதல்:

## உடனடியாக விசாரணை நடத்தி குற்றவாளிகளைக் கைதுசெய்யவும்

### சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்துகின்றது

கொழும்பு, நவ. 16


லசந்த விஜயரத்ன சம்பவம் தொடர்பில் உடனடியாகப் பரிசோதனை செய்து தாக்குதல் தொடர்பான தகவல்களை வெளியிடும்படியும், குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் ஊடக இயக்கம் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காலி ஹபராதுவையைச் சேர்ந்த எழுத்தாளரான லசந்த விஜயரத்ன தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சுதந்திர ஊடக இயக்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

நேற்றுமுன்தின் அதிகாலை காலி ஹபராதுவையில் அமைந்துள்ள லசந்த விஜயரத்னவின் வீட்டுக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த குழுவொன்று இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது என்று தெரியவருகின்றது. தாக்குதலுக்குள்ளான லசந்த விஜயரத்ன கராபிடிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர் 2015ஆம் ஆண்டு எழுதிய 'வீண்விரய அபிவிருத்தி மற்றும் ஊழல்' என்ற புத்தகம் தொடர்பாக கேள்வியெழுப்பியே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

தேர்தல் தினத்துக்கு 48 மணிநேரம் இருக்கும்போது இந்த நாட்டில் ஜனநாயகத்துக்குச் சவால் விடுக்கப்பட்ட இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாகப் பரிசோதனை நடத்தப்பட்டு தாக்குதல் தொடர்பான தகவல்களை வெளியிடும்படியும், குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் சுதந்திர ஊடக இயக்கம் பொறுப்புவாய்ந்தவர்களிடம் வேண்டிக்கொள்கின்றது. என்று சுதந்திர ஊடக இயக்கம் கோரியுள்ளது. (கு)



## மாந்தை கிழக்கில் வீடு மீது தாக்குதல்

முல்லைத்தீவு, நவ. 16

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிவபுரம் பகுதியில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் துணுக்காய்ப் பிரதேச இணைப்பாளர் வி.தியாந்தன் வீட்டின் மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டுக்குச் சென்ற மல்லாவிப் பொலிஸார் தாக்குதல் நடத்திய வீட்டின் ஜன்னல்களைப் பார்வையிட்டனர். (கு-கீ3)

# இலங்கை செல்வோரை எச்சரித்தது அமெரிக்கா

கொழும்பு, நவ. 16

இலங்கையில், அரச தலைவர் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் ஆர்ப்பாட்டங்களுக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதனால் தமது நாட்டுக் குடிமக்களை அவதானமாக இருக்குமாறு அமெரிக்கத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் விடுக்கப்பட்ட 2ஆவது நிலை பயண ஆலோசனையில் எந்த மாற்றமும் இல்லை. பெரிய கூட்டங்கள் அல்லது ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடங்களுக்கு அருகில் இருப்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சுற்றுலா தளங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பொது இடங்களுக்குச் செல்லும்போது அவதானமாக இருங்கள்.

அத்தோடு உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் உள்நாட்டு ஊடகங்களை கண்காணித்து, புதிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளைச் செய்யுமாறும் கேட்கின்றோம் என்றுள்ளது. (ம)

# இன்றையதினத்தை சகலரும் வாக்களிக்கவே ஒதுக்குங்கள்

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு



மன்னார், நவ. 16

தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் வரலாற்றுக் கடமையைச் செய்வதற்கு இன்றையதினத்தை ஒதுக்குங்கள் என்று அரசதலைவர் தேர்தல் தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் அனைவரும் தங்களுடைய கடமைகளைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு இன்று காலையில் முதல் வேலையாக வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களியுங்கள்.

தமிழ் மக்கள் நூறு வீதமானோரும் வாக்களிக்கவேண்டும்.

தமிழ் மக்களுக்கான தீர்வு விடயங்களைக் கூட அதி உச்ச அதிகாரப்பகிர்வுடன் பெற்றுக் கொள்ளக் கூடிய காலம் கனிந்து வந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ் பேசும் மக்கள் ஒரு போதும் தவற விடக் கூடாது.

வாக்களிப்பு நிலையம் தூரம் என்றோ அல்லது கடைசி நேரத்தில் வாக்களிப்போம் என்றோ இதனால் நமக்கு என்ன லாபம் என்னும் அசமந்தப் போக்கான சிந்தனைகளையோ விட்டுவிடுங்கள். ஒருநபர் எதிர்மறையாகச் சிந்தித்தாலும் அது எமது ஒட்டுமொத்த தமிழ் சமூகத்துக்கே பேரிழப்பாக இருக்கும். எனவே தமிழ் மக்கள் எந்தச் சிரமங்களையும் பாராது நூறு வீத வாக்களிப்புகளைச் செய்து வடக்கு கிழக்குப் பகுதியில் பலமான ஜனநாயக சூழலை உருவாக்குவோம். அதற்கு நாம் வாக்களிப்பது அவசியம். - என்றார். (த-213)

# ஒழுக்காற்று நடவடிக்கை: அடுத்தவாரம் ஆராய்வோம்

## ரெலோவின் தலைவர் தெரிவிப்பு



மன்னார் நவ.16

கட்சியின்தீர்மானத்தை மீறி வேறு வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்த கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

எமது கட்சிக்கென்று ஒரு யாப்பு உள்ளது. யாப்பின் படி கட்சியின் தலைமைக் குழுவே தீர்மானங்களை மேற்கொள்ளும். நடைபெறப்போகும் அரசதலைவர் தேர்தலில் எமது கட்சிஎடுத்ததீர்மானத்தை மீறி எமது கட்சியின் உறுப்பினர்களில் சிலர் வேறு வேட்பாளர்களை ஆதரிக்கின்றோம் என்று கூறியுள்ளனர். அரச தலைவர் தேர்தல் முடிவடைந்த பின்னர் எமது கட்சியின் தலைமைக் குழு கூடி அவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை குறித்து ஆராயும் எனத் தெரிவித்தார். (த-104)

*பல்கலையில் பகிடிவதை*

# 10 மாணவர்களுக்கு நீதிமன்று எச்சரிக்கை

கொழும்பு, நவ. 16

ஊவா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதை குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவர்கள் பத்துப்பேர் பதுளை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 6ஆம் திகதி ஊவா பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருட மாணவர்கள் இருவர் பகிடி வதைக்குற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில், அதே பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவர்கள் பத்துப் பேர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

பகிடி வதைக்குற்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் இருவர், பதுளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதையடுத்து மேற்படி 10 மாணவர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் அனைவரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (ம)

# நாட்டின் சில பகுதிகளில் இடியுடன் மழை பெய்யும்

கொழும்பு, நவ.16

நாட்டின் சில பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பி.ப. ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. அது பின்னர் மேல் மற்றும் வடமேல் மாகாணங்களுக்கும் பரவக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும், காலி, மாத்தறை மற்றும்களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 5075 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் கரையோரத்தை அண்டிய பகுதிகளில் காலை வேளையிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றாலும் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் கிழக்குப் பகுதியில் சிறிதளவு மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடிவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 2030 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது (மணித்தியாலத்துக்கு 7080 கிலோ மீற்றர் வரையான) பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# காலதாமதம் இல்லாமல் வாக்குகளைப் பதிவிடுங்கள்

## முல்லைத்தீவு செயலர் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் நேரகாலத்துடன் சென்று தங்கள் வாக்குகளைப்பதிவுசெய்யுமாறுமுல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தலுக்காக முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், தேர்தல் திணைக்களத்துடன் இணைந்து மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 75 ஆயிரத்து 381 வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள [illegible] வாக்களிப்பு நிலையங்களை அமைத்துள்ளது.

பொலிஸாரின் பாதுகாப்புடன் வாக்கு பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. வாக்களிப்பு நிலையங்களை மேற்பார்வை செய்வதற்காக 28 வலையங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றுக்கு உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாக்கெடுப்பு நிலையங்களைக் கண்காணிப்பதற்காக அவை உருவாக்கப்பட்டுள்ளன. பெரும் வலயங்களாக 7 வலயங்கள் உருவாக்கப்பட்டு அவற்றையும் கண்காணிப்பதற்காக உதவி தெரிவத்தாட்சி அலு[illegible]ர் நியமிக்கப்பட்டுள்ளனர் [illegible] மாவட்டச் செயலக வளாகத்துக்குள் 9 வாக்கெண்ணும் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் காலதாமதம் இல்லாமல் நேரகாலத்துடன் சென்று வாக்குகளைப் பதிவு செய்யுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்வதுடன் நீதியானதும், நேர்மையானதுமான தேர்தல் நடைபெறுவதற்கு ஏற்ற விதத்தில் தேர்தல் நடவடிக்கையைபொலிஸாருடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றோம் இதுவரையில் 15 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை பாரதூரமானவையல்ல. - என்றார். (கரி3- 246)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 148 வாக்கெடுப்பு நிலையங்கள்

மட்டக்களப்பு,நவ.16

அரச தலைவர் தேர்தல் வாக்கெடுப்புக்கான சகல விதமான ஏற்பாடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 428 வாக்கெடுப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பாதுகாப்புக் கடமைகளுக்காக ஆயிரத்து 688 பொலிஸாரும் , 320 சிவில் பாதுகாப்புப் படையினரும் நியமிக்கப்பட்டுள்ளனர். வயோதிபர்கள் மற்றும் சிறப்புத் தேவை உடையவர்களும் வாக்களிக்கத் தேவையான சகல வசதிகளும், வாக்கெடுப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வாக்குப்பெட்டிகள் கையளிப்பதற்கு 54 உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் கடமைக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

அதனைத் தவிர வலயங்களுக்குப் பொறுப்பான உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களும் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்வர்.

தேர்தல் பணியைக் கண்காணிப்பதற்கான கண்காணிப்பு குழுவின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை 53 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் 35 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. 18 முறைப்பாடுகளுக்குரிய தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் ஆறு முறைப்பாடுகள் வன்முறைகளாகவும், 47 முறைப்பாடுகள் தேர்தல் விதி மீறுதல்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. - என்றார். (க)

# போதையில் சாரத்தியத்துக்காக இதுவரை 60கோடி ரூபா தண்டம்

கொழும்பு, நவ. 16

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கைது செய்வதற்கு பொலிஸார் முன்னெடுத்த வேலைத்திட்டத்தின் பயனாக கடந்த நான்கு மாத காலத்துக்குள் 62 கோடியே 50 லட்சம் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அதிகாரி இந்திக ஹபுகொட தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதம் 5 ஆம் திகதி இந்தநடவடிக்கைநாடளாவியரீதியில் முன்னெடுக்கப்பட்டதாகவும் தற்பொழுதும் அது நடைமுறையில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசேட நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் வரையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 25 ஆயிரம் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது குறைந்த பட்சம் ஒருவரிடம் 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதனால், தொடர்ந்தும் இதனை முன்னெடுத்துச்செல்ல தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)



### மட்டக்களப்பு நபர் கின்னஸ் சாதனை

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பைச் சேர்ந்த இளங்கோவன் மதனன் என்பவர், 118 மூலகங்களைக் கொண்ட ஆவர்த்தன அட்டவணையை இரண்டு நிமிடம் 41 செக்கன்களில் வரிசைக் கிரமமாக அடுக்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் இந்தச் சாதனையை இரண்டு நிமிடம் 49 செக்கன்களில் செய்த கின்னஸ் சாதனையை, 8 செக்கன்களால் முறியடித்து மதனன் சாதனை படைத்துள்ளார். (க)

## அமைச்சர் ராஜித வழக்குத் தாக்கல்

கொழும்பு, நவ.16

அமைச்சர் ராஜித சேனாரத்தனவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோட்டை நீதவான் நீதிமன்றில் சட்டத்தரணி ஜனஜித் டி சில்வாவால் நேற்றுமுன்தினம் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாக அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இருந்தார். அதில் கடத்தல்களுக்காக வெள்ளை வானை செலுத்தியதாக கூறப்படும் சாரதி ஒருவரும், கடத்தலுக்கு உள்ளான ஒருவரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடத்தல்களுடன் தொடர்புடைய ஒருவர் தலைமறைவாக இருப்பதற்கு உதவியளித்தார் என்று அமைச்சர் ராஜித மீது குற்றம் சுமத்தி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ)

## இறப்பு வீட்டிலும் தேர்தல் பரப்புரை

### விசனம் தெரிவித்தனர் அங்கு வந்திருந்தோர்

சாவகச்சேரி, நவ. 16

சாவு வீட்டுக்கு வந்திருந்தவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி துண்டறிக்கைகள் வழங்கிக் கொண்டிருந்த வேளையில், சிலர் தேர்தல் பரப்புரைத் துண்டறிக்கைகளை வழங்கியுள்ளனர். அதற்கு அங்கு வந்திருந்தவர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

எதை எங்கு வழங்குவது என்று சிந்தித்துச் செயற்பட வேண்டும். இறப்பு வீட்டில் இப்படிப் பரப்புரை செய்வது ஆரோக்கியமானதல்ல என்றும் மக்கள் அங்கு சுட்டிக்காட்டினர். (த-9)

## வாக்கு என்ற உரிமையை கட்டாயம் பயன்படுத்தவும்

### அது ஜனநாயகம் என்று எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, நவ. 16

வாக்கு என்பது எமது ஜனநாயக உரிமை. அதை உரிய முறையில் பயன்படுத்துங்கள். தனித்துவமாகத் தலை நிமிர்ந்து வாழ்ந்த எமது இனத்தை கொத்துக் கொத்தாகக் கொன்றொழித்த கொலைகார கும்பல் தோற்கடிக்கப்பட வேண்டும். எனவே வாக்கு என்னும் ஜனநாயக ஆயுதத்தை, ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துங்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

அவரின் பன்முகப்படுத்தப்பட்ட சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் மூலம் கிளிநொச்சி கோணாவில் யூனியன்குளம் வானதாரகை விளையாட்டுக் கழகத்துக்கு 5 இலட்சம் ரூபா பெறுமதியான மின்னொளி விளக்குகள் பொருத்தி அதனைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினமிரவு நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது பகுதிகள் பல வகையிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேவை உண்டு. அதனை நிராகரிக்கவில்லை. எமது முயற்சியால் தாயகப் பகுதிகளில் கணிசமான அளவு அபிவிருத்தி இடம்பெற்று வருகின்றது.

யூனியன்குளம், கோணாவில் போன்ற பகுதிகளுக்கு போக்கு வரத்துச் செய்யும் வீதிச் சீரமைப்பு முதற்கொண்டு பல அபிவிருத்தித் தேவைப்பாடுகள் காணப்படுகின்றன. முதற்கட்டமாக இந்தப் பகுதி வீதிகளை விரைவாகச் சீரமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இந்தப் பகுதிகளுக்கு எம்மால் முடிந்தளவு அபிவிருத்தியைப் பெற்றுக்கொடுக்க முயற்சித்துள்ளோம்.

அபிவிருத்தி பற்றி நாம் கதைத்தாலும் வெறும் அபிவிருத்திதான் எமது இலக்கு என்பதல்ல. இந்த மண்ணிலே பாரம்பரியமாக வாழ்ந்த வரலாற்றுப் பின்னணி கொண்ட எமது தமிழ் இனம் தற்போது உரிமைகள் பறிக்கப்பட்டு உரிமைகளை இழந்து இந்த உரிமைகளையாவது எமக்குத் தரமாட்டார்களா? என்ற நிலையில் ஏங்கி நிற்கின்றோம்.

வாக்கு என்னும் ஜனநாயக ஆயுதத்தைச் சரியாகப்பயன்படுத்திஎமக்கு வலி தந்தவனைக் கிலி கொள்ள வைப்போம். - என்றார்.

இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்களான ஜீவராசா, சி.சுப்பையா, மத்திய செயற்குழு உறுப்பினர் ஜெயக்குமார், ஆசிரியர் சிவேந்திரன், மாதர் சங்கத் தலைவி சூரியகலா, வானதாரகை விளையாட்டுக் கழக வீரர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர். (த-426)

## கிளி. மாவட்டச் செயலகத்தில் 7 வாக்கெண்ணும் நிலையங்கள்

கிளிநொச்சி,நவ.16

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் 7 வாக்கெண்ணும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தேர்தல் நிலமைகள் தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மாவட்டத்தில் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தேர்தல் கடமைகளுக்காக ஆயிரத்து 750 அரச அலுவலர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில் 100 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. வாக்களிப்பு நிறைவு பெற்றதும் வாக்குகளை எண்ணுவதற்காக பெட்டிகள் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்துக்குஎடுத்துவரப்படும். தேர்தல்கள் திணைக்களத்தின் அனுமதியுடன் உள்நாட்டு, வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கு 2 பொலிஸார் வீதம் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போதைய காலநிலமையைக் கருத்தில் கொண்டு இயலுமானவரை மக்கள் நேரத்துக்குச் சென்று வாக்களிக்க வேண்டும். அமைதியானதும், சுமுகமானதுமாக தேர்தலை நடாத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளுக்காக மாவட்டச் செயலகத்தில் ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு முறைப்பாடுகள் இருப்பின் 0213900151, 0213034051 என்ற இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். - என்றார். (சு-6,35)

## புலனாய்வுத் துறைக் கணிப்பு என வலம்வரும் தகவல் பொய்

கொழும்பு, நவ.16
அரச புலனாய்வுத்துறையினரால் அரச தலைவரிடம் கையளித்த தேர்தல் முடிவு என குறிப்பிட்டு சமூக வலைத்தளங்களில் உலாவரும் கணிப்பு முற்றிலும் பொய்யானது என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர் பொலிஸார்.

அரச புலனாய்வுத் துறையினரால் தயாரிக்கப்பட்ட அரச தலைவரால் கையளிக்கப்பட்டதாக கூறப்பட்டு அந்த விவரம் சமூக வலைத் தளங்களில் பரவியது.

அரச புலனாய்வு சேவை உட்பட இலங்கைப் பொலிஸாரால் எந்தவொரு நிறுவனமும் ஒரு சுயாதீன அமைப்பு அல்ல என்று பொலிஸ் ஊடகத் தொடர்பாளர் தெரிவித்தார்.

அரசதலைவர் தேர்தலை சுதந்திரமாகவும் அமைதியாகவும் நடத்துவதற்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் பொலிஸார் முழு கவனம் செலுத்தப்படும் என்று பொலிஸ் ஊடக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (ஏ)

# நாட்டின் வரலாற்றில் அமைதியான தேர்தல்

## மைத்திரிபால திருப்தி

கொழும்பு, நவ.16
இலங்கையின் வரலாற்றில் முதல்முறையாக நியாயமான, அமைதியான தேர்தலை நடத்த முடிந்துள்ளது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று பொலிஸ் கேட்போர் கூடத்தில் பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சேவையை நினைவுகூரும் வகையில் மதிப்பளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் தெரிவித்துள்ளார்.

நியாயமான மற்றும் அமைதியான தேர்தலை நடத்த அர்ப்பணித்து செயற்பட வேண்டும் பாதுகாப்பு அமைச்சருக்கும், பொலிஸாருக்கும் அரச தலைவர் மைத்திரிபால அறிவுறுத்தினார்.

நாட்டில் தரமான பொலிஸ் சேவையை நிறுவுவதற்கு பொலிஸ் திணைக்களத்தை பொறுப்பேற்ற நாளிலிருந்து எடுத்துள்ள நடவடிக்கைகளை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

இதேவேளையில், இராணுவம், விமானப்படை, கடற்படையினரால் அரச தலைவருக்கு கௌரவம் வழங்கு நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைக்கு பொறுப்பான தளபதியாக, நாட்டின் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தி, இலங்கை ஆயுதப்படைகளின் கௌரவத்தை பாதுகாத்து, ஜனாதிபதி கடந்த ஐந்து ஆண்டுகளில் எடுத்த நடவடிக்கைக்கு முப்படையினரும் நன்றி தெரிவித்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் பிரதானி உள்ளிட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பல்கலைக் கழகத்தின் அனைத்து துணைவேந்தர்களும் நேற்றுமுன்தினம் பிற்பகல் அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் சந்தித்தனர்.

பல்கலைக்கழக மாணவர்களின் நலனுக்காகவும், நாட்டில் உயர்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகவும் கடந்த ஐந்து ஆண்டுகளில் செயற்பட்ட முறைக்கு துணைவேந்தர்களிற்கு அரச தலைவர் நன்றி தெரிவித்தார். (ஏ)

## சுவரொட்டி வைத்திருந்தோர் பொலிஸாரால் கைது



கொழும்பு, நவ.16
தேர்தல் அமைதி காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மீறிய பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அரசதலைவர் வேட்பாளர் ஒருவருக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான ஒரு தொகை சுவரொட்டிகளை கண்டி பிரதேசத்தில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கண்டியில் தனியார் பொதிகளை விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றின் ஊடாக இந்த சுவரொட்டிகள் வழங்கப்படுகின்றன என்று, ஜாதிக ஹெல உறுமயவின் கண்டி மாவட்ட இணைப்பதிகாரி துஷார சுவர்ணதிலக செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பொதிகளை வழங்கும் நிறுவனத்திடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் கண்டி மாநகர சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டை பரிசீலனை செய்த போது இந்த சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை, அரச தலைவர் வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டிகளை வீடு வீடாக வழங்கிய ஒருவரை தும்மலசூரிய - வீரகொடியான பிரதேசத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடம் இருந்து 155 சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## கைதான தம்பிராசா விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 16
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக வைத்துக் கைது செய்யப்பட்ட தம்பிராசா சில மணித்தியாலங்களில் விடுவிக்கப்பட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவை பதவி விலகுமாறு கோரி நேற்றுமுன்தினம் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். (கு)

# சுதந்திரமான தேர்தல் நடத்த பூரண ஒத்துழைப்பு வழங்குக

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, நவ.16
நாட்டுமக்கள் அனைவரும் சுதந்திரமானதும், நியாயமானதுமான அரச தலைவர் தேர்தல் நடைபெறுவதற்கும், கடந்த காலத்தில் நிலவிய அநாகரிகமான அரசியல் கலாசாரம் மீண்டும் கட்டியெழுப்பப்படாமல் இருப்பதற்குமான பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க வலியுறுத்தியுள்ளார்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்ட சிறப்பு அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக சுயாதீன ஆணைக் குழுக்களை ஆரம்பித்து நாடு முழுவதும் ஜனநாயக தன்மையுடையதும், நியாயதிக்கத்துக்குட்பட்டதுமான அமைதியான சூழலொன்றை உருவாக்க நாம் நடவடிக்கை எடுத்தோம்.

அத்தகைய ஜனநாயக , நியாயாதிக்க சூழலில் இடம் பெறுகின்ற முதலாவது அரச தலைவர் தேர்தலுக்கான ஆயத்தங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் சுயாதீன ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கு அவசியமான பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக முப்படை யினர் மற்றும் பொலிஸாருக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சுதந்திரமானதும் நியாயமானதும், அமைதியானதுமான தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கு உரிய நிறுவனங்களுக்கும், அதிகாரிகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவதே இந்த நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் எம் அனைவரினதும் கடமையாகும்.

தற்போது நாம் இத்தகைய சுதந்திரமான சூழ்நிலை மேலும் வலுப்படுத்த வேண்டும். மீண்டும் கடந்தகாலத்தில் நிலவிய அநாகரிகமான அரசியல் கலாச்சாரம் கட்டியெழுப்பப்படாமல் இருப்பதற்கு எம்மால் இயலுமான அளவிற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அனைவரும் இன்றைய தினம் வாக்களிப்பதுடன், இந்த அரச தலைவர் தேர்தல் சுதந்திரமானதும், அமைதியானதுமான முறையில் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அரச தலைவர் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாத்து அமைதியான முறையில் செயற்பட வேண்டும் என்று அனைவரிடமும் குறிப்பாக கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஏ)

## தேர்தல் கடமைகளுக்கான பேருந்துகள் யாழ்.முற்றவெளியிலிருந்து புறப்பட்டன

யாழ்ப்பாணம், நவ.16
அரச தலைவர் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ள நிலையில், தேர்தல் கடமைகளுக்குச் செல்லும் வாகனங்கள் நேற்றையதினம் அனுப்பிவைக்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தேர்தல் கடமைகளுக்குச்செல்லும் வாகனங்கள் அனைத்தும் இம்முறை முற்றவெளியில் இருந்தே புறப்பட்டன.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளை கொண்டு செல்லுதல் மற்றும் அதிகாரிகளை அனுப்பும் நடவடிக்கைகள் நேற்றையதினம் இடம்பெற்றன. பலத்த பாதுகாப்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்கு செல்லும் வாகனங்கள் யாவும் முற்றவெளியில் இருந்தே புறப்பட்டுச்சென்றன. அரச மற்றும் தனியார் பேருந்துகள் உட்பட சகல வாகனங்களும் முற்றவெளியில் இருந்தே இம்முறை தேர்தல் கடமைகளுக்குச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

கடந்த தேர்தல்களின்போது தேர்தல் கடமைக்கு செல்லும் சகல வாகனங்களும் யாழ்ப்பாண மாநகர வளாகத்திலேயே தரித்து விடப்பட்டன. மாநகர வளாகத்தில் நகர மண்டபம் அமைக்கப்பட்டு வருவதால் இம்முறை தேர்தல் கடமைக்கு செல்லும் வாகனங்கள் முற்றவெளியில் நிறுத்தப்பட்டு கடமைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

அத்துடன் அரச தலைவர் தேர்தல் பணிக்காக போக்குவரத்துச் சபைப் பேருந்துகள், மற்றும் தனியார்பேருந்துகள் பயன்படுத்தப்பட்டதால், பொதுமக்களுக்கான பேருந்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. (ஐ-17)

பூநகரி கௌதாரிமுனையில் இடம்பெறும்

# இயற்கை வள அபகரிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வு

## சுமந்திரன், சிறீதரன் எம்.பிக்கள் களப்பயணம்



கிளிநொச்சி, நவ. 16

பூநகரி கௌதாரிமுனையில் சட்ட விரோதமாக மண் அகழ்வு இடம் பெறும் நிலையில், அதற்குச் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோர் அங்கு நேற்றுமுன்தினம் சென்று மக்களுடன் கலந்துரையாடினர்.

பூநகரியின் வளம்நிறைந்த அழகிய கிராமமாகவும் அதிக மண் வளம் நிறைந்த பூர்வீக கிராமமாகவும் 3ஆயிரம் வருடங்களாக மக்கள் வாழ்ந்து வரும் இடமாகவும் கௌதாரி முனை விளங்குகின்றது. பூர்வீக ஆலயமான மண்ணித்தலை சிவன் ஆலயம் இந்தக் கிராமத்துக்கு பழம்பெரும் வரலாற்றைப் பறைசாற்றி நிற்கின்றது.

அங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த நிலையில் தற்பொழுது 135 குடும்பங்களே வசித்து வருகின்றன. இந்தக் கிராமத்தில் காணப்படும் இயற்கை வளங்களைச் சுரண்டும் பல்வேறு முயற்சிகள் பல்வேறுபட்ட தரப்பினராலும் மேற்கொள்ளப்படுகின்றன. மக்களுக்கு அற்ப ஆசைகள் காட்டி அவர்களின் அறியாமையைப் பயன்படுத்தி கவனத்தைத் திசை திருப்பி அந்த இடங்களை அபகரிக்க பலர் முயற்சிக்கின்றனர்.

இலங்கையில் சில இடங்களிலேயே காணப்படும் மண் வளம் இந்தப் பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றது. அழகான கடற்கரைச் சூழல் காணப்படுவதாலும் சுற்றுலாப் பயணிகள் மிகவும் விரும்புகின்ற இடமாகவும் இது காணப்படுகின்றது என்று அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இங்கு இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அங்குள்ள மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகக் குழுவினர் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தலைமையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் குறித்த பகுதிக்குச் சென்று இதுபற்றி ஆராய்ந்திருந்தனர்.

அதன்படி, குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் குறித்த பகுதிக்குச் சென்றிருந்தார்கள்.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கௌதாரி முனை வட்டாரப் பிரதேச சபை உறுப்பினர் பூபாலபிள்ளை மற்றும் கட்சியின் அமைப்பாளர்கள், பிரதேச மட்ட அமைப்பினர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். (த-6)

## ஒளி விழா நிகழ்வுகள்



சுன்னாகம் நவ.16

யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றன.

கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்னிந்திய திருச்சபைப் போதகர் எஸ்.லிங்கேஸ்வரன் கலந்து கொண்டார்.

கரோல் பாடல்கள், நடனம், நாடகம் உள்ளிட்ட மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. மாணவர்கள்.ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ-104)

✦ ✦ ✦ ✦ ✦ ✦



கொடிகாமம்,நவ.16

யாழ்ப்பாணம் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் அருட்தந்தை றெஜி இராஜேஸ்வரன் அடிகளார், வணக்கத்துக்குரிய வசந்தகுமார் போதகர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-159)



## சான்றிதழ் வழுங்கும் நிகழ்வு

வவுனியா,நவ.16

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட அழகுக்கலை தொழில் வழிகாட்டல் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா வடக்கு வலய வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அன்னமலர் சுரேந்திரன்.வடக்கு மாகாண தொழி நுட்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் லெனின் அறிவழகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)



சமூக மற்றும் கல்விக்கான சேவையைப் பாராட்டி சமூக ஆர்வலர் இ.மோர்சிபவனக்கு வவுனியா நெடுங்கேணி மகா வித்தியாலத்தின் பாடசாலை சமூகத்தால் மதிப்பளிப்பு நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டது. (ஐ-421)

கற்சிலைமடு - கனகபுர வீதியின்

## பாலம் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெறுகிறன

முல்லைத்தீவு, நவ. 16

கற்சிலைமடுக் கிராமத்தை யும் கனகரத்தினபுரம் கிரா மத்தையும் இணைக்கும் பேராற்றுப் பால அமைப்புப்பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பாலம் பல வருடங்களாக உடைந்தநிலையில் சீரமைப்பின்றி இருந்தது. எனினும் வேறு மார்க்கமின்றி 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தப் போக்குவரத்தில் பலவிதமான இடர்பாடுகளை எதிர்கொண்டு வந்தன. குறித்த பாலத்தை விரைவில் அமைத்துத் தரவேண்டும் என்று மக்களும் கிராமமட்ட அமைப்புக்களும் குரல் கொடுத்துவந்தன.

இந்தநிலையில் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் ஆலோசனைக்கமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் நிதியீட்டலில் 8.58மில்லியன் ரூபா செலவில் பாலம் அமைக்கப்பட்டு வருகின்றது. மிக விரைவில் பணிகள் பூர்த்தியாகும் என்று கட்டுமானப் பணியிலுள்ளவர்கள் தெரிவித்தனர்.

குறித்த பால அமைப்புப் பணிகள் சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் பின்னர் சில மாதங்கள் இழுபறியிலேயே காணப்பட்டது. அதனால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுவந்தனர். (த-500)







## நூல் வெளியீடும் அன்பளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம்,நவ.16

தரம் 7 மாணவர்களுக்கான ஆங்கில மொழியிலான "மெதமெற்றீஸ்" நூல் வெளியீடும், அன்பளிப்பு நிகழ்வும் யாழ்ப்பாணம் சின்மயா மிசனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றன.

சின்மயா மிசன் சுவாமி சிதாகாசானந்தா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக பீட [illegible]திபதி மூத்த பேராசிரியர் தி.வேல்நம்பி,சிறப்பு விரு[illegible]னராக யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்[illegible] அதிபர் ம.ஞானசம்பந்தன் ஆகியோர் கலந்துகொ[illegible]டனர். (ஐ)

# கிராம மக்கள் பயனடைய பேருந்து சேவை நடத்துங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

முல்லைத்தீவு, நவ. 16

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன், பொக்கணை, அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் உள்ளிட்ட கிராம மக்கள் பயனடையும் வண்ணம் உள்ளூர் பேருந்து சேவை ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்று அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த கிராமங்களுக்கிடையே பேருந்து சேவை இன்மையால், அங்குள்ள மக்கள் சுமார் பல கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்பு நகருக்குச் சென்று தாம் போகவேண்டிய இடங்களுக்குச்செல்லவேண்டியுள்ளோம் என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் மாவட்ட மருத்துவமனை உள்ளிட்ட அரச பணிமனைகளுக்கு சேவை பெறச்செல்லும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள்.

குறிப்பாகப் சுதந்திரபுர கிராமத்தில் அறுநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் பேருந்து சேவையைப் பெற்றுக்கொள்ள ஆறு கிலோமீற்றருக்கும் மேற்பட்ட தூரத்துக்கு நடந்துசெல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

விசுவமடு தொட்டியடிப் பகுதியில் வாழும் மக்களுக்கும் இதே நிலை தான். பேருந்தை தமது கிராமத்துக்கு ஒழுங்கு செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். உள்ளூர் சேவை மேற்கொள்ளும் பேருந்துகள் தங்கள் பகுதிகளிலும் சேவையில் ஈடுபட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

எனவே இந்த விடத்தில் தனியார் பேருந்து சேவைச் சங்கங்கள் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுத்து பேருந்துச் சேவை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். (து-ரி3)




# நோயாளர்களுக்கு போசாக்கு உணவு

## வவுனியா மருத்துவமனையில் முன்னெடுப்பு

வவுனியா, நவ.16

காசநோய்க்கு உள்ளான வறிய குடும்பங்களைச் சேர்ந்த நோயாளர்களுக்கான போசாக்கு உணவு வழங்கும் திட்டம் ஒன்று வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையின் மார்பகச் சிகிச்சைப் பிரிவில் காச நோய்க்கான சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளுக்கே இவ்வாறு போசாக்கு உணவு வழங்கப்படுகிறது.

மருத்துவர் ஹரிஹரனின் வேண்டுகோளுக்கிணங்க வீ 3 பவுண்டேசன் இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இந்த மாதத்துக்கான போசாக்குப் பொதிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாவட்ட சமூக சேவை அலுவலகர் செ.ஸ்ரீநிவாசனால், மாவட்ட மார்பகச் சிகிச்சைப்பிரிவு மருத்துவர் ஷெல்டனிடம் கையளிக்கப்பட்டன. (ஐ-222)

# பட்டாசு வெடித்தமைக்கு மன்னிப்புக் கோரினார் உறுப்பினர்

சாவகச்சேரி, நவ. 16

தென்மராட்சி சாவகச்சேரியில் கடந்த புதன் கிழமை, இறப்பு நிகழ்வில் பட்டாசு வெடிக்க வைக்கப்பட்ட நிலையில், சபை உறுப்பினர் சபையின் நேற்று முன்தினம் நடந்த அமர்வில் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்.

சபையின் விதிமுறைக் கேற்ப நகர் உள்ளிட்ட பகுதிகளில் பட்டாசு வெடிக்க வைக்க வேண்டாமென்று பல தடவைகள் கூறப்பட்டது. எனினும், அதற்கு எவருமே செவிசாய்க்கவில்லை.

இதனால் சபையின் கட்டுப்பாட்டை மீறும் வகையில் பட்டாசுகள் வெடிக்க வைக்க மாட்டோமென்று குறித்த உறுப்பினர் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டிருந்தார்.

எனினும், தனது உறவினர் என்பதால் பட்டாசுகள் வெடிக்க வைக்கப்பட்டமை தனது சக்திக்கு அப்பாற்பட்டிருந்தாலும் சபையின் விதிமுறைகளை மீறியதற்காகச் சபையிடம் மன்னிப்பு கோருகின்றேன் என்று தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரில் சபை உறுப்பினர் ஒருவரின் உறவினரின் இறுதிக்கிரியைகளுக்காக நேற்றுமுன்தினம் சடலம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளையில் அரை மணிநேரம் சாவகச்சேரி சந்தி[illegible]சு வெடிக்க [illegible] (து-9)

## குருதிக்கொடை



யாழ்ப்பாணம், நவ.16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் வேண்டுகோளுக்கு இணங்க பல்கலைக்கழக விஞ்ஞான பீடத் திறந்த கற்றல் மண்டபத்தில் குருதிக்கொடை முகாம் இடம் பெற்றது. (ஐ)

# 2 கிலோ கஞ்சா வைத்திருந்தாரென இளைஞன் கைது

கிளிநொச்சி, நவ 16

பளை, இயக்கச்சியில் சுமார் 2 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் 20 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர்.



சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய வடமராட்சி கிழக்கு கேவில் பகுதியில் நேற்று முன்தினம் இளைஞனைச் சோதனையிட்ட போது கஞ்சாப் பொதி மீட்கப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கேவில் பகுதியிலிருந்து வெளிமாவட்டத்துக்கு கஞ்சாவைக் கடத்த முற்பட்டார் என்று ஆரம்ப விசாரணைகளைக் மேற்கொண்ட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கட்டைக்காடு கேவில் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞன் சட்ட நடவடிக்கைக்காக பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் [illegible]ரிவித்தனர். (து-6)

# யாழ்.போதனா மருத்துவமனை முன்பாக வாகன உடமைகள் திருட்டுப்போகின்றன

## சாதாரண மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் பொலிஸார் கவனம் செலுத்தவேண்டுமென்று கோரிக்கை

வலி.தென்மேற்கு, நவ.16

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்குமுன்பாக மருத்துவமனை வீதியில் நிறுத்தப்படும் உந்துருளிகள், முச்சக்கர வண்டிகளின் பற்றறிகள் மற்றும் இருக்கைகள் என்பன திருடப்பட்டு வருகின்றன.

இது குறித்துப் பொலிஸார் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

சில நாள்களுக்கு முன்னர் உந்துருளியின் பற்றியும் இருக்கையும் திருடப்பட்டுள்ளன. மருத்துவமனைக்குச் சென்று அரை மணித்திலாயத்தில் திரும்பிவந்து பார்த்தபோது பற்றரியும் இருக்கையும் திருடப்பட்டிருந்தன.

போதனா மருத்துவமனை மருத்துவசிகிச்சை விடுதியில் சேர்க்கப்பட்டிருக்கும் உறவினரைப் பார்த்துவிட்டுவந்தபோது அவை திருடப்பட்டிருந்தன. கடந்த வாரம் மற்றொருவரின் உந்துருளியின் இருக்கையும் திருடப்பட்டிருந் தது. சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் முச்சக்கரவண்டியில் பொருத்தப்பட்டிருந்த பற்றறி திருடப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த மனைவியை அழைத்துவர சகோதரனின் முச்சக்கர வண்டியை பெற்றுச் சென்று மருத்துவமனை முன்பாக நிறுத்திவிட்டு மருத்துவமனைக்குச் சென்று மனைவியை அழைத்துவந்து முச்சக்கரவண்டியை இயக்கிய போது அதன் எஞ்சின் இயங்கவில்லை. என்ன, ஏது என்று பார்த்தபோதே அதன் பற்றறி திருடப்பட்டுள்ளது தெரியவந்தது.

குறித்த பற்றறி 7 ஆயிரம் ரூபா பெறுமதியுடையது என்றும் திருட்டுப் போவதற்கு 5 நாள்களுக்கு முன்னரே புதிதாக அந்த பற்றறி கொள்வனவு செய்யப்பட்டு முச்சக்கரவண்டியில் பொருத்தப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து குறித்த இடத்தில்நின்றவர்களிடம் விசாரித்தபோது இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்று கூறியுள்ளனர்.

இது குறித்து பொலிஸார் மிகக் கவனமெடுத்து ஆராயவேண்டும்.

விசாரணை செய்து குறித்த திருட்டுக்களில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து தண்டிக்க வேண்டும். இந்த விடயத்தில் பொலிஸார் பின்நிற்கக் கூடாது என்று பாதிக்கப்பட்டவர்கள் வலியுறுத்துகின்றனர். (து-115)

# மது விற்பனை நிலையங்களை மாவீரர் நாளன்று மூடிவிடுங்கள்

## கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை

கிளிநொச்சி, நவ. 16

**மாவீரர் நாளன்று கரைச்சிப் பகுதிகளிலுள்ள மதுபான நிலையங்கள் அனைத்தையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றது. எதிர்வரும் 27 ஆம் நாள் கடைப்பிடிக்கப்படவுள்ள மாவீரர் நாளன்று மதுபான நிலையங்கள், களியாட்ட நிகழ்வுகளுக்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன. கொள்கலன்கள், இறைச்சிக்கடைகள், திரையரங்குகள், தனியார் கல்வி நிலையங்கள், போன்றவற்றை மூடவேண்டும் என்று கரைச்சி பிரதேச சபை அமர்வில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் எதிர்காலத்தில் நடைமுறையில் இருக்கும். மாவீரர் நாளை மதிப்புறு நாளாகக் கடைப்பிடிப்பதற்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (கு-6)



## மாணவர்கள் மதிப்பளிப்பு

கிளிநொச்சி,நவ.16

கிளிநொச்சி கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

அத்துடன் மாணவர்களை ஊக்குவித்த ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரும் பெற்றோர்களால் மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் கண்டாவளை கோட்டக்கல்விப் பணிப்பாளர், முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,கிராம அலுவலர், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-421)

## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.16

வன்னி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையமும், கருகம்பனை இந்து இளைஞர் கழகமும் இணைந்து இந்த உதவியை வழங்கியுள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத் தலைவர் மு.நிறைஞ்சன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

வன்னி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான சீட்டிழுப்பு வலி.வடக்குப் பிரதேச சபையின் அனுமதியுடன் கடந்த தீபாவளித் தினத்தன்று நடத்தப்பட்டது.

அதனூடாக கிடைக்கப்பெற்ற நிதி மூலம் கற்றல் உப்கரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் சட்டத்தரணி சி.சிவபாலசுப்பிரமணியம், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய அறக்கட்டளை போதனாசிரியர் ம.வஜிதன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 100 க்கு மேற்பட்ட வறிய மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

### கடந்த சபை அமர்வில் எடுக்கப்பட்ட

## தீர்மானம் நடைமுறைக்கு வரவில்லை: அமர்வுக்கு மறுத்த உறுப்பினர்கள்

### சாவகச்சேரி நகர சபையில் இந்தநிலை

சாவகச்சேரி, நவ. 16

சாவகச்சேரி நகர சபையின் கடந்த மாத அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தமக்கு எழுத்து மூலமாக அறிக்கையாக வழங்கவேண்டும் என்று வலியுறுத்திய உறுப்பினர்கள், தவறின் கடந்த மாத அமர்வின் அறிக்கையை முன்மொழிய மாட்டோமென்று தெரிவித்தனர். இதனால் சுமார் இரண்டரை மணித்தியாலங்களாக திட்டமிட்ட நடவடிக்கையின்றி வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகரசபையின் நவம்பர் மாத அமர்வான நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தவிசாளரின் உரையின் பின்னர் கடந்த மாத அமர்வின் அறிக்கையை முன்மொழியுமாறு தவிசாளர் சபையினரிடம் கூறினார்.

இதன்போதே உறுப்பினர்கள் மேற்கண்டவாறு பதிலிறுத்தனர். "நாங்கள் மாதம் ஒருமுறை கூடி தீர்மானங்கள் நிறைவேற்றுகின்றோம். அந்தத் தீர்மானங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக எந்தவொரு விவரமும் எமக்குக் கிடைப்பதில்லை.

எனவே கடந்த மாத அமர்வின்போது நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தவிசாளர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக தமக்கு எழுத்து மூலமாக, ஆவணங்களை வழங்கவேண்டும். வழங்கினால்தான், கடந்த மாத அறிக்கையை முன்மொழிவோம். தவறின் முன்மொழியமாட்டோம்" என்று கூறிவிட்டனர். உடனடியாக அறிக்கைகள் வழங்காததால் கடந்த மாத அமர்வின் அறிக்கையை முன்மொழிய இரண்டரை மணிநேரம் சென்றன.

கடந்த மாத அமர்வின் போது சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள மின்குமிழ்களைத் திருத்தம் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் ஒரு மாதமாகியும் பழுதடைந்த விளக்குகள் திருத்தம் செய்யப்படவில்லை. தீர்மானம் தொடர்பாக தவிசாளர் மேற்கொண்ட நடவடிக்கை என்ன? பழுதடைந்த விளக்குகளைச் சீர்செய்யுமாறு பொதுமக்கள் வழங்கும் முறைப்பாட்டுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாதுவிடின் மக்கள் தங்கள்மீதும் குறை சொல்வார்கள் என்றும் உறுப்பினர்கள் நிலைமையைத் தெரிவித்தனர். இது தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கு அறிவித்திருந்தேன் என்றும் அவர்கள் உரிய காலத்தில் வருகை தராததால் தாமதம் ஏற்படுகின்றது என்றும் தவிசாளர் தெரிவித்தார். (கு-9)



## தேசிய மட்டப் போட்டிக்கு இரு அணிகள் தெரிவு

கொடிகாமம்,நவ.16

மாகாண மட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் யாழ்ப்பாணம் கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் தரம் 3, தரம் 5 கலப்பு அணிகள் தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மாகாண மட்ட போட்டிகள் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

தேசிய மட்ட போட்டிகள் மார்கழி மாதம் 18,19,20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (ஐ-159)

## சேவை நிலையம் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருட்டு

கொடிகாமம் நவம்பர் 16

திருமண சேவையில் ஈடுபட்டு வரும் நிலையம் ஒன்று இனந்தெரியா தோரால் உடைக்கப்பட்டு அங்கிருந்த கணினி மற்றும் தொலைபேசி கள் என்பன திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் வவுனியா தவசிக்குளம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## வாக்களிக்கச் செல்வதற்கு இரணைதீவுக்குப் படகுகள்

வாக்களிப்பதற்குதமக்குவாய்ப்புஏற்படுத்தித் தரவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைதீவில் வாழும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இரணைமாதா நகரில் வாழும் மக்கள் பலர் இரணைதீவைப் பூர்வீக மாகக் கொண்டவர்கள். பிற இடத்தவர்கள் சிலர் தொழில் நிமித்தம் இரணைதீவில் தங்கியுள்ளனர். அவர்கள் பூநகரிக்கோ அல்லது வேறு எங்காவது செல்வதாயின் படகில்தான் செல்லவேண்டும். இரணைதீவு நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட பகுதி என்பதால் இந்தநிலை. எனவே, தாங்கள் வாக்களிக்கச் செல்வதற்கு படகு ஒழுங்குகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மாவட்டத் தேர்தல் செயலக அதிகாரிகளிடம்கேட்டபோது, தீவில் தங்கிவாழ்பவர்கள்மற்றும்தொழில்நிமித்தம் உள்ளவர்களை மீனவர்களின் படகுகள் மூலம் வாக்களிக்கும் இடத்துக்கு அழைத்து வந்து வாக்களிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் பூநகரிப் பிரதேச செயலரின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவித்தனர். (கு-105)

## விருப்புக்குரிய ஒருவருக்கு வாக்களியுங்கள்

### மைத்திரி கோரிக்கை



கொழும், நவ. 16
ஜனநாயகம் பலப்படுத்தப்பட்டுள்ள ஒரு நாட்டில் மக்களின் அதிகாரமாகவும் முதன்மை கடமையாகவும் பொறுப்பாகவும் அமைவது தமது விருப்புக்குரிய ஒருவருக்காக வாக்கைப் பதிவுசெய்வதே. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு விடுத்த சிறப்பு அறிக்கையிலேயே அரச தலைவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

2019ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் திகதி அதாவது இன்றைய தினம் இடம்பெறும் அரச தலைவர் தேர்தலில் நாடு முழுவதும் உள்ள சகல வாக்காளர்களும் சுதந்திரமாக தமது வாக்கைப் பதிவு செய்வதற்கான சூழல் தற்போது நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய பொலிஸார் மற்றும் முப்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புத் துறையினர் அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நிறைவேற்றியுள்ளதுடன், தேவையற்ற பரப்புரைகளையும் வதந்திகளையும் நம்பி ஏமாறாது மக்கள் தமக்கான வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளைப் பதிவு செய்யுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சகல வாக்காளர்களிடமும் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ.5)

## புனிதக் கடமையை நிறைவேற்றுங்கள்!

### நல்லை ஆதீன முதல்வர்



யாழ்ப்பாணம், நவ. 16
அரச தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை அனைவரும் எவ்வித தயக்கமும் இன்றி பயன்படுத்த வேண்டும் எனவும் எவரும் தேர்தலை புறக்கணிக்கக்கூடாது என்றும் நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பாக அவர் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்ததாவது,

தேர்தலில் வாக்களிக்க வேண்டியது ஒவ்வொருவரின் ஜனநாயகக் கடமையாகும். அந்தக் கடமையையும் பொறுப்பையும் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். வாக்களிப்பது என்பது நமது புனிதமான கடமையாகும். வாக்களிக்கும் உரிமையை அனைவரும் எவ்வித தயக்கமும் இன்றி பயன்படுத்த வேண்டும்.

தேர்தல் தினத்தன்று வாக்குரிமை பெற்ற அனைவரும் மாலை நேரம் வரை காலம் தாழ்த்தாது நேரகாலத்துடன் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று உங்கள் வாக்குகளை பயனுள்ளதாக்க வேண்டும் - என்றார். (ஒ.5)

### இலங்கை வரலாற்றில் முக்கிய தேர்தல்

# தமிழ் மக்கள் தவறாது வாக்களிக்க வேண்டும்

### சம்பந்தன் அறைகூவல்

யாழ்ப்பாணம், நவ. 16
இலங்கையில் இன்று நடைபெறுகின்ற அரச தலைவர் தேர்தல் வரலாற்றில் முக்கிய தேர்தல். எனவே, வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள தமிழ் மக்கள் அனைவரும் தவறாது வாக்களிக்கவேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

நாட்டின் ஆட்சியை மக்கள்தான் தீர்மானிக்கின்றார்கள். தங்கள் ஜனநாயக உரிமை மூலம் இந்தத் தீர்மானத்தை எடுப்பது அவர்களின் பிரதான கடமை.

இந்த நாட்டில் வாழ்வுரிமை வேண்டுமெனில் வாக்குரிமையுள்ள சகல மக்களும் வாக்களித்தே ஆகவேண்டும். எக்காரணம் கொண்டும் அந்தக் கடமையிலிருந்து எவரும் பின்வாங்கவே கூடாது.

நாட்டில் இன்று நடைபெறுகின்ற அரச தலைவர் தேர்தல் வரலாற்றில் முக்கிய தேர்தல். எனவே, வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள தமிழ் மக்கள் அனைவரும் தவறாது வாக்களிக்க வேண்டும். அவர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையைக் குறிப்பிட்ட நேரத்துக்குச் சென்று சரிவர நிறைவேற்ற வேண்டும் - என்றார். (ஒ.5,22)



# தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட 51 அதிகாரிகள் திடீர் மயக்கம்

### உணவு ஒவ்வாமையே காரணம்

கொழும்பு, நவ. 16
உணவு விசமடைந்ததன் காரணமாக தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள, கொழும்பு ரோயல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்புநிலையத்தின் அதிகாரிகள் இன்று திட்டமிடப்பட்டவாறு சேவையில் ஈடுபட முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர்கள் நேற்றுப் பகல் எடுத்துக் கொண்ட உணவு விசமடைந்ததன் காரணமாகவே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அதிகாரிகளை மகிந்த தேசப்பிரிய, தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க மற்றும் தேசிய மருத்துவமனையின் பணிப்பாளர் ஆகியோர் நேற்று மாலை பார்வையிட்டனர்.

சுகயீனமுற்றவர்களுக்கு தேவையான சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளதால், அவர்களால் இன்றைய தினம் உரிய முறையில் கடமையில் ஈடுபட முடியும் என்று மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டினார். (ஒ.5)

# மனித உரிமை விடயங்களுக்கு முக்கியத்துவம் தொடரும்

கொழும்பு நவ. 16
இலங்கையின் அரச தலைவர் தேர்தலில் யார் வென்றாலும் தனது அயலுறவுத்துறைக் கொள்கையின் முன்னுரிமைக்குரிய விடயமாக அமெரிக்கா மனித உரிமையை முன்னிறுத்தவேண்டும் என்று பன்னாட்டு மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் அமெரிக்க அரசு இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதில் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

2015 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை குறித்த தீர்மானத்திற்கான கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதிலும் அமெரிக்க முக்கிய பங்களிப்பை வழங்கியது என்று மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை சபையிலிருந்து இலங்கை விலகிய பின்னர் இலங்கையில் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் முக்கிய மன்றத்தில் பங்களிப்பு செய்வதை அமெரிக்கா கைவிட்டுள்ளது.

சீனா ஆசிய பிராந்தியத்தில் காலடி எடுத்துவைப்பது குறித்து மூலோபாய கரிசனை கொண்டுள்ள அமெரிக்கா மனித உரிமைகள் நீதி பொறுப்புக்கூறல் ஆகியவற்றை ஊக்குவிப்பது பிராந்தியத்தில் ஜனநாயக நாடுகள் பலமடைவதற்கு அவசியம் என்பதை அமெரிக்கா உணரவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரச தலைவர் தேர்தலில் யார் வென்றாலும் அமெரிக்கா தனது அயலுறவுக் கொள்கையின் முன்னுரிமைக்குரிய விடயமாக மனித உரிமையை முன்னிறுத்தவேண்டும் எனவும் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார். (ஒ.5)

## இன்று...

ஒரு கோடி 59 இலட்சத்து 92 ஆயிரத்து 96 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வடக்கில் மாத்திரம் 8 லட்சத்து 46 ஆயிரத்து 651 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் அந்தந்த மாவட்ட செயலகங்களிலிருந்து நேற்றுக் காலை 7 மணி முதல் பொலிஸாரின் கடும் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன. 12 ஆயிரத்து 856 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டு, வாக்காளர்கள் இன்று வாக்களிப்பதற்குரிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரச தலைவர் தேர்தலுக்காக நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. 60 ஆயிரத்து 175 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் 80 ஆயிரத்து 80 சிவில் பாதுகாப்பு ஊழியர்களும் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்களின் பிரகாரம், வாக்கெண்ணும் பணிகளில் மட்டும் சுமார் 48 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதனைவிட ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் வாக்களிப்பு நிலைய பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் நலன்புரி மற்றும் போக்குவரத்து கடமைகளில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த பட்சம் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் 8 அரச ஊழியர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் வாக்களிப்பு நிலையத்தின் தேவைக்கேற்ப அந்த எண்ணிக்கை அதிகரிக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரச தலைவர் தேர்தல் வரலாற்றில் அதிகமான வேட்பாளர்கள் இம்முறை போட்டியிடுவதால் மிக நீளமான இரண்டு அடி வாக்குச்சீட்டே வாக்களிப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச தலைவர் தேர்தல் முடிவுகள் இன்று நள்ளிரவுக்கு முன்வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முழுமையான முடிவுகள் நாளை காலையிலேயே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## வாக்குரிமை...

அனைவருக்கும் வாக்குரிமை என்பது எமது வாழ்வுரிமையாகும். இதனை நாம் எமது சமுதாயக் கடமையாக எண்ணிச் செயற்பட வேண்டும். நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலிலும் எமது உரிமையைச் செம்மையாகப் பயன்படுத்த வேண்டும். எங்களுடையதும் சமுதாயத்தி னதும் உரிமை கருதி செல்லுபடியாகக் கூடியவாறு ஒவ்வொருவரும் வாக்களி யுங்கள். அதிலிருந்து பின்வாங்க வேண்டாம். என்று இந்துக் குருமார் அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (த-106)

## மதுபானங்களுடன்...

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் முடமாவடிப் பிரதேசத்தில் உள்ள மதுபான விற்பனை நிலையத்திலிருந்து பெருந்தொகையான மதுபானப் போத்தல்கள் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டுள்ளன. அந்த வாகனத்தைப் பிடிப்பதற்காக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் சென்றனர். இருப்பினும் வாகனம் ஓடித் தப்பியுள்ளது.

அரச தலைவர் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், மதுபான விற்பனை நிலையங்கள் இன்றைய தினமும், நாளைய தினமும் மூடப்படவுள்ளன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரசியல் கட்சி ஒன்றின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரின் ஏற்பாட்டில் 3 மதுபான விற்பனை நிலையங்களிலிருந்து தலா 500 மதுபானப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவற்றை மதுபான விற்பனை நிலையங்களிலிருந்து வாகனங்களில் ஏற்றும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்டது.

முடமாவடிப் பிரதேசத்தில் இவ்வாறு வாகனத்தில் ஏற்றப்படுவது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல்கள் முறைப்பாட்டுப் பிரிவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்துக்குப் பொலிஸாருடன் அதிகாரிகள் சென்ற போதும் வாகனம் தப்பிச் சென்று விட்டது.

விற்பனை நிலையத்திலிருந்த மறைகாணி (சிசிரிவி) பதிவுகளைப் பார்வையிட அதிகாரிகள் கோரினர். அதற்கு முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் அங்கிருந்தவர்களால் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மறைகாணி பதிவுகளை அதிகாரிகளால் பார்வையிட முடியவில்லை. இருப்பினும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெக்கப்பட்டு வருகின்றது. (ஒ,5,105)

## இறுதிப்...

ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே? எனக் கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில் நேற்றுப் போராட்டம் நடத்தினர். அவர்கள் நடத்தி வரும் தொடர் போராட்டத்தின் ஆயிரம் நாளை முன்னிட்டு இந்தப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதி, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தொடர் போராட்டத்தை வவுனியாவில் ஆரம்பித்திருந்தனர். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? என்று கோரி இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

### இறுதிப் போர்

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் 2006ஆம் ஆண்டு போர் ஆரம்பிக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் 2008ஆம் ஆண்டு ஆரம்பத்தில் வன்னிப் பெரு நிலப் பரப்பு மீதான தாக்குதல் முன்னெடுக்கப்பட்டது. சிறிலங்காவின் முப்படையினரையும் பயன்படுத்தி இந்தப் பெரும் போர் நடத்தப்பட்டது. 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியுடன் போர் நிறைவுக்கு வந்தது.

'இறுதிப் போரில் சுமார் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டனர்' என்று ஐ.நா. பொதுச் செயலராக இருந்த பான்கீமூன் நியமித்த நிபுணர் குழு அறிக்கையிட்டது. அந்த அறிக்கையில் மருத்துவமனைகள் மீதும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், பாதுகாப்பு வலயங்கள் என்று அறிவிக்கப்பட்ட பிரதேசங்களின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது என்று குறிப்பி டப்பட்டிருந்தது.

'இறுதிப் போரில் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன' என்று ஐ.நா. நிபுணர் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவரான யஸ்மின் சூக்கா தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

'இறுதிப் போரில் ஒரு லட்சத்து 46 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர். போர் ஆரம்பமாக முன்னர் இருந்த மக்கள் தொகையும், போரின் பின்னர் நலன்புரி நிலையத்திலிருந்த மக்கள் தொகையையும் கணக்கிட்டு இதனைக் கூறுகின்றேன்' என்று மன்னார் மறை மாவட்ட ஆயராக இருந்த இராயப்பு யோசப் தெரிவித்திருந்தார்.

'போரின் போது பன்னாட்டு மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டது. பொது மக்கள் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டது. போரின் இறுதியில் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர்' என்று பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் கூறியிருந்தது.

'போரின் இறுதியில் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அவர்களின் உறவுகளால் போராட்டம் நடத்த முடியவில்லை. புலனாய்வாளர்களால் அவர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்' என்று பன்னாட்டு மன்னிப்புச் சபை கூறியிருந்தது.

2015ஆம் ஆண்டின் பின்னர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் போராட்டம் நடத்தினர். வவுனியாவில் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆரம்பித்த போராட்டம் நேற்று ஆயிரம் நாளை எட்டியது. இதனை முன்னிட்டு கவனவீர்ப்பை நேற்று நடத்தினர்.

'புதிய அரசதலைவர் வந்தாலும் எங்களிடமிருந்து கடத்தப்பட்ட எங்கள் குழந்தைகளையும் அன்பானவர்களையும் கண்டுபிடிக்கும் வரை நாங்கள் எங்கள் போராட்டத்தைத் தொடருவோம். எங்கள் போராட்டத்தின் 2000 ஆவது நாளை அடைவதற்கு முன்பு, காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் மக்களைக் கண்டுபிடித்து, நிரந்தர பாதுகாப்பையும் சுய ஆட்சியையும் எடுத்துக் கொள்வோம் என்று நம்புகிறோம்' என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவித்தனர். (ஒ,த,5,110)

## தேர்தல்...

அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரைக் காலம் முடிந்த பின்னர், அரச பணியாளரான மருத்துவர் ஒருவர் நேற்றுத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டுள்ளார். அதே மருத்துவமனையில் பணியாற்றும் பணியாளர் ஒருவரும், தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரிப் பரப்புரையில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச தலைவர் தேர்தல் இன்று இடம்பெறவுள்ளது. பரப்புரைகள் கடந்த புதன்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவுக்கு வந்துள்ளது. இந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர் ஒருவர், நேற்று நோயாளர்களை அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளரை ஆதரிக்குமாறு கூறிப் பரப்புரையில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மருத்துவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அதே மருத்துவமனையில் பணியாற்றும் பணியாளர் ஒருவர், தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்று பரப்புரை மேற்கொண்டுள்ளார். இது தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ,5)

## வாக்காளர்...

அரச தலைவர் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள், தேர்தல்கள் திணைக்களத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆள்களை உறுதிப்படுத்தும் எந்தவொரு அடையாள அட்டையுடனும் சென்று வாக்களிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை அரச தலைவர் தேர்தலுக்காக தேர்தல்கள் திணைக்களத்தால் தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளில் 25 ஆயிரத்து 640 வாக்காளர் அட்டைகள் தபாலகங்களில் தேங்கியுள்ளதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 14 ஆயிரம் வாக்காளர் அட்டைகளும், கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 523 வாக்காளர் அட்டைகளும், முல்லைத்தீவில் ஆயிரத்து 500 வாக்காளர் அட்டைகளும், மன்னாரில் ஆயிரத்து 630 வாக்காளர் அட்டைகளும், வவுனியாவில் 5 ஆயிரத்து 987 வாக்காளர் அட்டைகளும் விநியோகிக்கப்படாமல் தபால் திணைக்களத்தில் தேங்கியுள்ளது.

வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தபால் திணைக்களத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்புடுத்தி இன்றைய தினமும் பெற்றுக் கொள்ள முடியும். இல்லாவிடின் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தியும் வாக்களிக்க முடியும். (ஒ,5,17)

## அரச...

அரச தலைவர் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், வாக்காளர்களைத் திசை திருப்பும் வகையில் இறுதி நேரத் 'திருகுதாளங்கள்' நேற்றுத் தாராளமாக அரங்கேறின. சமூக ஊடங்கள், இணையத்தளங்கள் வாயிலாக பொய்யான செய்திகள், காணொலிகள் வெளியிடப்பட்டு வாக்காளர்களைக் குழப்பும் நடவடிக்கையில் இனந்தெரியாத தரப்புக்கள் ஈடுபட்டன.

### பாண் விலை அதிகரிப்பு

இணையத் தளங்களிலும், சமூக ஊடகங்களிலும் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பாணின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியிடப்பட்டன. செய்திகள் வெளியிடப்பட்ட சிறிது நேரத்திலேயே, பிரிமா நிறுவனம் மற்றும் நுகர்வோர் அதிகார சபை என்பன, அந்தச் செய்திகள் பொய்யானவை என்று மறுப்பு வெளியிட்டன. தேர்தலை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்ட மோசடி என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் அமைச்சர் மங்கள சமரவீரவும் மறுப்பு வெளியிட்டிருந்தார்.


### கோத்தாவின் குடியுரிமை

இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமையைத் துறக்கவில்லை என்று காணொலி ஒன்று வெளியிடப்பட்டது. அமெரிக்க அதிகாரிகள் கூறுவதைப் போன்று அந்தக் காணொலி அமைந்திருந்தது. அந்தக் காணொலி பொய்யானது என்று அமெரிக்கத் தூதரகம் மறுத்துள்ளது. (ஒ,5)


# ‘எம்.எச்.17’ வீழ்த்தப்பட்டதன் பின்னணியில் ரஷ்யா?

ஆம்ஸ்ரெர்டம்,நவ.16

மலேசியாவின் வானூர்திச் சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான ‘எம்.எச்.17’ என்கிற வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதன் பின்னணியில் ரஷ்யா இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நடந்து வருகின்ற பன்னாட்டு விசாரணையிலேயே இந்தச் சம்பவத்துக்கும் ரஷ்யாவுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.




இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
உக்ரைனில் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியில், 2014ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் திகதி பறந்துகொண்டிருந்த எம்.எச்.17 வானூர்தியை ஏவுகணை கொண்டு தாக்கியதில் அதில் பயணித்த 298 பேர் சாவடைந்தனர். குறித்த வானூர்தியைச் சுட்டு வீழ்த்தியவர்களாக கிழக்கு உக்ரைன் பகுதியில் நிலைகொண்டுள்ள ஆயுததாரிகள் கருதப்பட்டனர். இந்த ஆயுததாரிகளை ரஷ்யாவின் உயர் அதிகாரிகள் வழிநடத்தியதாகப் புலனாய்வாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். அத்தோடு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் மூத்த உதவியாளர் ஒருவர் குறித்த ஆயுததாரிகளுடன் தொடர்பில் இருந்ததாகப் புலனாய்வாளர்கள் கூறுகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ரஷ்யாவின் அயலுறவுத்துறை மறுப்புத் தெரிவித்தது.
பன்னாட்டுப் புலனாய்வாளர்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப இந்த விசாரணையைக் கையாண்டுள்ளதாக ரஷ்ய அயலுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா கூறினார். நெதர்லாந்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் இந்தப் பன்னாட்டு விசாரணை குழு, இந்த விவகாரத்தில் ரஷ்யாவுக்குத் தொடர்பு இருப்பதாக நேரடியாகக் குறிப்பிடவில்லை. எனினும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களாகக் கருதப்படும் நான்கு நபர்களில் இருவருடன் ரஷ்யா தொலைபேசி வழியாகத் தொடர்பில் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளதாகக் குறிப்பிடுகின்றது.



## 300அடி ஆழ்துளைக்குள் விழுந்த சிறுவன் மீட்பு

புதுடெல்லி,நவ.16
இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் 300 அடி ஆழ்துளைக் கிணற்றுக்குள் தவறி விழுந்த 6 வயதுச் சிறுவன் உயிருடன் மீட்கப்பட்டான். மகாராஷ்டிர மாநிலத்தின் நாசிக் மாவட்டத்தில் உள்ள கல்வான் என்ற கிராமத்தில் நேற்றுமுன்தினம் காலை இந்தச் சம்பவம் நடந்தது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுவினர் சிறுவனை மீட்கும் பணியில் ஈடுபட்டு நீண்ட நேரப் போராட்டத்துக்குப் பிறகு சிறுவனை மீட்டனர். கடந்த மாத இறுதிப் பகுதியில், தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டம் நடுக்காட்டுப்பட்டியில் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த சுஜித் என்ற 2வயதுக் குழந்தையை மீட்பதற்கு 82 மணி நேரம் முயற்சி மேற்கொண்டிருந்தும் அது வெற்றியளிக்காமல் அந்தக் குழந்தை சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## சந்திரயான்– 3

புதுடெல்லி,நவ.16
சந்திரயான்3 எனும் விண்கலத்தை 2020ஆம் ஆண்டில் விண்ணில் ஏவுவதற்கு இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
இஸ்ரோ அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திரயான்3 திட்ட உயர்நிலைக் குழுக் கூட்டத்தில், இதற்கான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.
இந்த விண்கலத்தை வடிவமைக்கும் பணிகளை 2020ஆம் ஆண்டு நவம்பருக்குள் நிறைவு செய்வது என இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்த முறை அனுப்பப்படும் தரையிறங்கு கருவியின் கால்கள் வலுவானவையாகவும், எந்தச் சூழலிலும் தரையிறங்கும் வகையிலும் வடிவமைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நிலவை நோக்கி இஸ்ரோவால் ஏவப்பட்ட சந்திராயன் 2 விண்கலம் காணா ல்போய் அந்த முயற்சி தோல்வி டைந்துள்ள நிலையில் சந்திராய... உருவாகி வருவது குறிப்பிடத்



பிரேசிலின் தலைநகர் பிரேசிலியாவில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் சந்தித்த தென்னாபிரிக்க அதிபர் சிரில் ரமபோசா, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, சீனா அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்யா அதிபர் விளாடிமிர் புடின், பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ ஆகியோர் ஒளிப்படத்துக்குக் கையசைக்கின்றனர்.

## மின்னல் தாக்கி 20 பேர் சாவு

இஸ்லாமபாத்,நவ.16
பாகிஸ்தானில் கடுமையான மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் அங்கு பரவலாக மின்னல் தாக்கங்கள் நிகழ்ந்தன. இந்த மின்னல் தாக்கங்களுக்கு இலக்காகி 20 பேர் வரையில் சாவடைந்தனர். பாகிஸ்தானில் சிந்து மாகாணம், மற்றும் அங்குள்ள பாலைவனப் பகுதிகள், தார்பர்கர் மாவட்டத்தில் மிதி, சாச்சி மற்றும் ராம் சிங் சோடோ கிராமங்களில் பரவலாக இந்த மின்னல் தாக்கிய சம்பவங்கள் நடந்தன. இந்த மின்னல் தாக்கங்களாலும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட தீயாலும் நூற்றுக்கணக்கான விலங்குகள் அழிந்துவிட்டதாகவும் தகவல்கள் வந்துள்ளன. அத்தோடு இந்த மின்னல் தாக்கங்களால் 30 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.





## ஆஸ்திரேலியாவில் காட்டுத்தீ; 3 வாரங்களுக்கு நீடிக்கலாம்

சிட்னி,நவ.16
ஆஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியில் கடந்த ஒரு வாரமாகப் பயங்கரமான காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. இந்தக் காட்டுத் தீயால் 150க்கும் அதிகமான வீடுகள் ...ாம்பலாகின. 2.5 மில்லியன் ... நிலங்கள் தீக்கு இரையாகின. காட்டுத் தீ ஏற்பட்ட இடங்களில் உலங்கு வானூர்திகள் மூலம் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகிறது. நியூ சவுத் வேல்ஸ் மற்றும் குயின்லாந்து ஆகிய மாகாணங்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று வாரங்களாக நீடிக்கின்ற இந்தக் காட்டுத் தீயை அணைப்பதற்கு ஆஸ்திரேலியா தடுமாறி வருகிறது. இந்தக் காட்டுத் தீ இன்னும் மூன்று வாரங்கள் வரை நீடிக்கலாம் என்று ஆஸ்திரேலியாவின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் தாக்குதல்


ஜெருசலேம்,நவ.16
இஸ்ரேல் - பாலஸ்தீன எல்லையிலுள்ள காசாப் பகுதியில் இஸ்ரேல் நடத்தி வருகின்ற தாக்குதல்கள் தொடர்கின்றன.

பாலஸ்தீன ஆயுதக் குழுவின் முக்கியத் தளபதியான பஹா அபு அல் அட்டா கொல்லப்பட்டதிலிருந்து இந்தத் தாக்குதல் தொடர்கிறது. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இது வரை 34 பாலஸ்தீனர்கள் சாவடைந்தனர்.



பஹா அபு அல் அட்டா கொல்லப்பட்டவுடன் ஆரம்பித்த இந்த மோதல் எகிப்தின் முயற்சியால் இரண்டு நாள் போர் நிறுத்தத்துக்கு வித்திட்டிருந்தது. ஆனால் அந்தப் போர் நிறுத்தத்தை மீறி இஸ்ரேல் தாக்குதலைத் தொடர்ந்துள்ளது. இதுகுறித்து இஸ்ரேல் இராணுவம் கூறும் போது,

'நாங்கள் தற்போது காசாவில் உள்ள இஸ்லாமிய ஜிகாத் ஆயுததாரிகளின் முகாம்களைத் தாக்கி வருகிறோம். இஸ்ரேலிய மக்கள் மீது காசாவிலிருந்து கண்மூடித்தனமாக ரொக்கெட்டுகள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் நடத்துகிறது' என்று தெரிவித்தது.



## இந்தோனேசியாவில் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கையும் விடுப்பு

ஜகார்த்தா,நவ.16
இந்தோனேசியாவின் மொலுக்காஸ் தீவுக்கு அருகே உள்ள கடல் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. நேற்று இரவு 9.47 மணிக்கு கடலுக்கு அடியில் 45 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் பாதிப்புகள் இந்தோனேசியாவின் சுலவேசித் தீவிலும் உணரப்பட்டன.

ரிக்டர் அளவுகோலில் 7.4 அளவாகப் பதிவான இந்த நிலநடுக்கத்தால் அங்குள்ள கட்டடங்கள் குலுங்கின. இதன் ஒரு பகுதியாக இந்தோனேசியா அரசால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் சிறிது நேரத்தில் சுனாமி எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. நில நடுக்கத்தால் சேதம் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

## ஜோ பைடன் ஒரு குரைக்கிற நாய்

வடகொரிய ஊடகம் கடும் விமர்சனம்



சியோல், நவ.16
அமெரிக்காவின் முன்னாள் துணை அதிபரும், எதிர்வரும் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடவுள்ளவருமான ஜோ பைடனை 'குரைக்கிற நாய்' என விமரி சித்துள்ளது வடகொரியாவின் தேசிய செய்திச் சேவை. வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் தொடர்பாக மிகக்கேவலமான வார்த்தைகளைப் பாவித்து ஜோ பைடன் அறிக்கை ஒன்றை வெளியிட்டதன் எதிரொலியாகவே வடகொரியா மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. அத்தோடு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் 'ஒரு வெறிபிடித்த கொலைகார சர்வாதிகாரி' என்றும் விமரிசித்துள்ளது குறித்த செய்திச் சேவை. அமெரிக்கா-வடகொரியா இடையேயான பேச்சுகள், சந்திப்புகளுக்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற சூழலில் வடகொரியா தரப்பிலிருந்து இந்த எதிர்வினையாற்றப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கு இடையிலுள்ள காசாப் பகுதியிலிருந்து செயற்பட்டு வருகின்ற பாலஸ்தீன ஆயுததாரிகளைக் குறிவைத்து இஸ்ரேல் கடும் தாக்குதலை நடத்திவருகிறது. பதிலுக்குக் காசாவில் இருந்து ஆயுததாரிகளால் இஸ்ரேல் நோக்கி ரொக்கெட்டுகள் ஏவப்படுகின்றன.



## இன்றைய நாள்

**மேடம்:** தாமதமான பணியை திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. திருப்திகரமான அளவில் பணவரவு கிடைக்கும். நண்பர், உறவினர்களை நன்கு உபசரிப்பீர்கள். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர்.

**இடபம்:** சிலரது பேச்சு உங்கள் மனதில் சங்கடம் தரும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு வேண்டும். பண பரிவர்த்தனையில் பாதுகாப்பு பின்பற்றவும்.

**மிதுனம்:** நல்ல செயல்களால் நண்பர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி பரிமாணம் ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**கடகம்:** அவசர பணி உருவாகி சிரமம் தரலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். குடும்ப தேவைக்கான பண செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண கூடாது.

**சிம்மம்:** இளமை கால இனிய நினைவுகள் மகிழ்ச்சியை தரும். உற்சாக மனதுடன் பணி புரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பண வரவு கிடைக்கும்.

**கன்னி:** உங்களின் நற்செயல்களால் பெயரும் புகழும் தேடி வரும். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி அடையும். பண பரிவர்த்தனை முன்னேற்றம் பெறும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள்.

**துலாம்:** நம்பக தன்மை இல்லாதவரிடம் ரகசியம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இயங்கும். அளவான பண வரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்களிடம் உதவி பெற்றவர் உதாசீனமாக பேசுவார். தொழில், வியாபாரத்தில் குளறுபடியை சரி செய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**தனுசு:** நண்பரின் பாராட்டு மனதிற்கு உவகை தரும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனையின் அளவு செழிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**மகரம்:** குடும்பத்தின் எதிர் கால நலனை கருத்தில் கொள்வீர்கள். சமயோசித நடவடிக்கையால் தொழில், வியாபாரம் சார்ந்த இடர் விலகும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** சிலர் போட்டி பந்தயங்களில் ஈடுபட உங்களை அழைப்பர். சமயோசிதமாக விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும்.

**மீனம்:** முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புகளை பயன்படுத்துவீர்கள். நண்பருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும்.

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.16

வலிகாமம் கால்பந்தாட்டா லீக்கின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள கால்பந்தாட்ட லீக்குகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் நவரட்ணராஜா ஞாபகார்த்த தலைவர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது காலிறுதியாட்டத்தில் சென்நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென்நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், நாவாந்துறை சென்மேரிஸ். விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

மற்றுமொரு போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், சிவானந்தா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 4: 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

(23)

---

யாழ்ப்பாணம், நவ.16

பருத்தித்துறைஐக்கியவிளையாட்டுக் கழகம் சூரிய மஹால் அனுசரனையுடன் நடத்தும் வைத்தியர் மயில்லேறும் பெருமாள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகஅணிக்கும், யங்லயன்ஸ்விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணிக்கும், கலட்டி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)



பாடசாலைகளுக்கிடையிலான சம்பியன்ஷிப் கால்பந்தாட்டத் தொடர்;

# தேசிய அணியில் 5 தமிழ் வீரர்கள்

யாழ்ப்பாணம், நவ.16

இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள 47ஆவது பாடசாலைகளுக்கிடையிலான சம்பியன்ஷிப் கால்பந்தாட்டத் தொடரில் பங்குபற்றவுள்ள 19வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன் க. சதுர்சன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் வி. விக்னேஸ், மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி மாணவர்களான அஜய் றீகன் மற்றும் டினோசன், புத்தளம் சாகிரா தேசிய பாடசாலை மாணவன் அர்ஷாத் முஹம்மது அஸ்பாக் ஆகிய 5 தமிழ் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். (23)

## சித்தேஷ் கொல்கத்தா அணிக்கு மாறினார்

ஐ.பி.எல். லீக்கில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வந்த சித்தேஷ் லாட் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு மாறியுள்ளார்.

2020ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ரி-20 போட்டிக்கான ஏலம் இடம்பெறவுள்ள நிலையில் சித்தேஷ் லாட் மும்பை-இந்தியன்ஸ் அணியிலிருந்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு மாறியுள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் ஏற்கனவே மயங்க் மார்கண்டேவை வெளியேற்றியுள்ளது. சித்தேஷ் லாட் கடந்த 2015 ஆம் ஆண்டில் இருந்து மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வந்தார்.

வேகப்பந்து வீச்சாளர்கள் ட்ரென்ட் போல்ட், தவால் குல்கர்னி ஆகியோரை ஏற்கனவே ஏனைய அணிகளில் இருந்து வாங்கியுள்ளது.






## நியூசிலாந்து டெஸ்ட் அணி அறிவிப்பு

### பெர்குசனுக்கு வாய்ப்பு

இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் பெர்குசன் இணைக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் 5 ரி-20 போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள் இடம்பெற்று வருகின்றது. இதில் ரி-20 போட்டியில் இங்கிலாந்து அணி 3:2 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி 21ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதற்கான 15 பேர் கொண்ட நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இடுப்பு காயத்தில் இருந்து குணமடைந்துள்ள அணித் தலைவர் கேன் வில்லியம்சன் அணிக்கு திரும்பி உள்ளார். வேகப்பந்து வீச்சாளர் லூக்கி பெர்குசன் முதல் முறையாக டெஸ்ட் அணியில் இடம் பிடித்து உள்ளார்.

நியூசிலாந்து அணி விவரம்:

வில்லியம்சன் (அணித் தலைவர்), ஜீத் ராவல், டாம் லாதம், ராஸ் டெய்லர், ஹென்ரி நிக்கோலஸ், வாட்லிங், கிராண்ட் ஹோம், சான்ட்னெர், டாட் ஆஸ்லே, டாம் ப்ளெண்டெல், போல்ட், மெட் ஹென்ரி, டிம் சவுத்தி, நீல் வாக்னர், லூக்கி பெர்குசன்.

## பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் ஆஸ்திரேலியா அணி அறிவிப்பு

### கவாஜா, மார்கஸ் ஹாரிஸ் நீக்கம்

பாகிஸ்தான் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் இருந்து கவாஜா, மார்கஸ் ஹாரிஸ் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்கான ஆஸ்திரேலியா நேற்று அறிவிக்கப்பட்டது.

இங்கிலாந்து அணிக்கெதிரான ஆஷஸ் தொடரில் விளையாடிய கவாஜா மற்றும் மார்கஸ் ஹாரிஸ் ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். ஆஷஸ் தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆடும் பதினொருவர் அணியில் இடம் கிடைக்காமல் தவித்த கேமரூன் பான்கிராஃப்ட்டுக்கு அணியில் இடம் கிடைத்துள்ளது. அதேபோல் ஜோ பேர்ன்ஸும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.


ஆஸ்திரேலியா 'ஏ' அணியில் இடம் பிடித்திருந்த நிக் மேடின்சன் மனநிலை அழுத்தம் காரணமாக போட்டியில் இருந்து விலகினார். இதனால் பான்கிராஃப்ட் அணியில் சேர்க்கப்பட்டார். பாகிஸ்தானுக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் 49 ஓட்டங்கள் பெற்றதால் அவருக்கு அணியில் இடம் கிடைத்துள்ளது.

வேகப்பந்து வீச்சில் பேட் கம்மின்ஸ், மிட்செல் ஸ்டார்க், ஜேம்ஸ் பேட்டின்சன், ஹசில்வுட் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். ஹசில்வுட்டுக்கு மாற்று வீரராக மிக்கேல் நெசர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புகோவ்ஸ்கி மனநிலை அழுத்தம் காரணமாக விலகியுள்ளதால், ஆஷஸ் தொடரில் இருந்து நீக்கப்பட்ட மத்திய தர துடுப்பாட்ட வீரர் டிராவிஸ் ஹெட்டுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.


ஆஸ்திரேலிய அணி விவரம்:

டிம் பெய்ன் (அணித் தலைவர்), கேமரூன் பான்கிராஃப்ட், ஜோ பேர்ன்ஸ், பேட் கம்மின்ஸ், ஜோஷ் ஹசில்வுட், டிராவிஸ் ஹெட், மார்னஸ் லாபஸ்சாக்னே, நாதன் லயன், மிக்கேல் நெசர், ஜேம்ஸ் பேட்டின்சன், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க், மேத்யூ வடே, டேவிட் வோர்னர்.






# மயங்க் அகர்வால் இரட்டைச் சதம் இந்திய அணி வலுவான நிலை




மயங்க் அகர்வால் இரட்டைச் சதம் குவிக்க இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 493 ஓட்டங்கள் குவிப்பு. பங்களாதேஷ் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடரை இந்திய அணி 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இதையடுத்து டெஸ்ட் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 150 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி முதல்நாள் முடிவில் ஓர் இலக்கை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. புஜாரா 43 ஓட்டங்களுடனும், அகர்வால் 37 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காக களமிறங்கினர். ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே புஜாரா 54 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். வந்தார் அணித் தலைவர் கோக்லி. அவர் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாது எல்.பி.டபிள்யு முறையில் வந்த வேகத்தில் நடையைக் கட்டினார். அவரது ஆட்டமிழப்புடன் பங்களாதேஷ் அணியின் உற்சாகமடைந்தனர். பின்னர் இணைந்த ராஹானே, அகர்வாலுடன் சேர்ந்து சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினார். மறுமுனையில் அகர்வால் ஓட்டங்களைக் குவித்த வண்ணம் இருந்தார். பங்களாதேஷ் பந்து வீச்சாளர்கள் இருவரது இணைப்பை பிரிப்பதற்கு பெரும் சிரமப்பட்டனர். அகர்வால் இரட்டைச் சதத்தைக் கடக்க அணி பெரும் பலம் பெற்றது. ராஹானே 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இணைந்த ஜடேஜா அதிரடி காட்டினார். மறுமுனையில் அகர்வால் 28 நான்கு ஓட்டங்கள் 8 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 243 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த யாதவ் ஒருநாள் போட்டியைப் போல அதிரடி காட்டினார். அவர் 10 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள் ஓர் 4 ஓட்டங்கள் அடங்கலாக 25 ஓட்டங்களைப் பெற்று களத்திலிருந்தார். அவருடன் ஜடேஜாவும் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருக்க அணி 6 இலக்குகளை இழந்து 493 ஓட்டங்களைப் பெற்றது.

## ஐ.பி.எல். போட்டியில் சிறப்பாக செற்படுபவரை டெஸ்ட் அணியில் இணைக்க முடியாது

### பும்ரா விதிவிலக்கு - கூறினார் சச்சின்

டெஸ்ட் கிரிக்கெட்டில் தரமான வேகப் பந்து வீச்சாளர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். இதனால் டெஸ்ட் போட்டியின் தரம் குறைந்து விட்டது என்று சச்சின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

1970 மற்றும் 1980களில் டெஸ்ட் கிரிக்கெட்டின் தரத்தை உயர்த்தும் வகையில் அதிக வேகப்பந்து வீச்சாளர்கள் இருந்தனர். அவர்களின் பந்து வீச்சு ரசிகர்களுக்கு உற்சாகம் அளிக்கக்கூடியதாகவும், துடுப்பாட்ட வீரர்களுக்கு சவால் அளிக்கும் வகையிலும் இருந்தது. ஆனால் தற்போது தரமான வேகப்பந்து வீச்சாளர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். இதனால் டெஸ்ட் போட்டியின் தரம் குறைந்து விட்டது. இது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு நல்லதல்ல. டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் தரம் உயர வேண்டியது அவசியமானதாகும். கிரிக்கெட்டின் தரத்தை உயர்த்தும் ஆணி வேர் ஆடுகளங்கள் தான் என்பதை நான் மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். வேகப் பந்து வீச்சாளர்களுக்கும், சுழற்பந்து வீச்சாளர்களுக்கும் ஓரளவு ஒத்துழைக்கும் ஆடுகளத்தை நாம் வழங்கினால், அது துடுப்பாட்டத்துக்கும், பந்து வீச்சுக்கு இடையே சரிசம போட்டி அளிக்கும் வகையில் இருக்கும்.




ஐ.பி.எல். போட்டியில் ஒருவர் சிறப்பாக செயற்பட்டால் அவரை பன்னாட்டு ரி-20 போட்டிக்கான அணியில் சேர்க்கலாம். அதேநேரத்தில் ஐ.பி.எல். போட்டியில் நன்றாக செயற்படும் ஒருவரை டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்ரான அணியில் சேர்த்தால் அது கேள்விக் குறியாகிவிடும். இது பும்ரா போன்ற திறமையான சில வீரர்களுக்கு விதிவிலக்காகும் - என்றார்.

## பயிற்சியில் ஈடுபட்டார் எம்.எஸ். டோனி

உலகக் கிண்ணப் போட்டிக்குப்பின் கிரிக்கெட் விளையாடுவதில் இருந்து ஒதுங்கி இருந்து வந்த இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் டோனி ராஞ்சியில் நேற்று வலைப் பயிற்சியில் ஈடுபட்டார்.

உலகக் கிண்ண தோல்விக்குப் பின்னர் டோனியின் துடுப்பாட்டம் குறித்து விமர்சனங்கள் எழுந்தன. முன்னாள் வீரர்கள் கவாஸ்கர், மஞ்சரேக்கர், சேவாக் ஆகியோரும் இவரின் துடுப்பாட்டம் குறித்து விமர்சித்திருந்தனர்.


இந்த நிலையில் மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான தொடர்களில் அவரது பெயர் பரிசீலிக்கப்படவில்லை. அதனால் இந்திய இராணுவத்தில் இணைந்து பயிற்சிகளை அவர் மேற்கொண்டார்.

இந்த நிலையில் தற்போது பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடர் நடந்து வருகிறது. இந்த தொடர் முடிந்த பின்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ரி-20 தொடர், ஒருநாள் தொடரில் விளையாட உள்ளது. இந்தத் தொடரில் டோனி விளையாடுவாரா என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளராக மிக்கி ஆர்தர்

இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக மிக்கி ஆர்தர் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சண்டிகா ஹதுருசிங்க அதிகார பூர்வமாக இன்னும் நீக்கப்பட வில்லை. என்றாலும், மிக்கி ஆர்தர் இலங்கையின் அடுத்த தலைமை பயிற்சியாளராக வாய்ப்பு காணப்படுகின்றது.



இலங்கை அணி பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்கு முன்னர் மிக்கி ஆர்தர் இந்தப் பொறுப்பை ஏற்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் உலகக் கிண்ணப் போட்டிகள் வரை பாகிஸ்தானின் தலைமைப் பயிற்சியாளராக இருந்து பின்னர் பதவி விலகியிருந்தார். இதற்கு முன்னர் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினர் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரின் பின்னர் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளரை இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்க அணுகியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைமை அதிகாரி தெரிவிக்கையில்;

நாங்கள் மிக்கியுடன் கலந்துரையாடி ஒரு உடன்பாட்டை எட்ட முடியும் என நம்புகின்றோம். மிக்க கடந்த காலங்களில் தென்னாபிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்தார். ஆனால் 2016ஆம் ஆண்டுமற்றும்2019ஆம்ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பாகிஸ்தானின் பயிற்றுவிப்பாளராகவும் இருந்து அந்தக் காலப்பகுதியில், ரி-20 போட்டியில் பாகிஸ்தானை முதலிடத்துக்கு அழைத்துச் சென்றார். உலகக் கிண்ணம் முடியும் வரை ஆர்தர் பாகிஸ்தானின் பயிற்சியாளராக இருந்தார். இவரது பங்களிப்பால் பாகிஸ்தான் அணி முன்னுக்கு வந்தது. இதனால் நாங்கள் அவரை தலைமைப் பயிற்சியாளராக நியமிப்பதற்கு விரும்புகின்றோம் - என்றார்.

# சென்னை அணியிலிருந்து 5 வீரர்கள் வெளியேற்றம்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5 வீரர்களை அணியிலிருந்து விடுவித்துள்ளது. ஐ.பி.எல். 2020 ஆம் ஆண்டுக்கான பருவ காலத்துக்காக வீரர்களை ஏலத்தில் எடுக்கும் நிகழ்வு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி கொல்கத்தாவில் இடம்பெறவுள்ளது. ஏலத்துக்கு முன்னர் 8 அணிகளும் தங்களுக்கு விருப்பப்பட்ட வீரர்களை வெளியேற்றலாம். அதேபோல் ஏனைய அணிகளிடம் இருந்து வாங்கிக் கொள்ளலாம்.

அதன்படி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மோகித் சர்மா, சாம் பில்லிங்ஸ், டேவிட் வில்லே, துருவ் ஷோரே, சைத்தான்யா பிஷ்னோய் ஆகிய 5 வீரர்களை வெளியேற்றியுள்ளது.

அதேபோல் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி தீபக் ஹூடா, மார்ட்டின் கப்தில், ரிக்கி புய், யூசுப் பதான் ஆகியோரை வெளியேற்றியுள்ளது.

தொடர் தோல்விகளைச் சந்தித்து வந்த பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி மார்கஸ் ஸ்டாய்னிஸ், ஷிம்ரோன் ஹெட்மையர், அக்ஷ்தீப் நாத், நாதன் கவுல்டர்நைல், கொலின் டி கிராண்ட்ஹோம், பிரயாஸ் பர்மன், டிம் சவுத்தி, குல்வான்ட் கெஜ்ரோலியா, ஹிம்மன் சிங், கிளாசன், மிலிந்த் குமார், ஸ்டெயின் ஆகிய 12 வீரர்களை வெளியேற்றியுள்ளது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி ஆஷ்டோன் டர்னர், ஒசானே தாமஸ், ஷுபம் ரஞ்சன், பிரசாந்த் சோப்ரா, இஷ் சோதி, ஆர்யமான் பிர்லா, ஜெய்தேவ் உனத்கட், ராகுல் திரிபாதி, ஸ்டூவர்ட் பின்னி, லியம் லிவிங்ஸ்டன், சுதேசன் மிதுன் ஆகிய 11 வீரர்களை வெளியேற்றியுள்ளது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ராபின் உத்தப்பா, கிறிஸ் லின், பியூஷ் சாவ்லா, ஜோ டென்லி, யர்ரா பிரித்விராஜ், நிகில் நாயக், கேசி கரியப்பா, மேத்யூ கெல்லி, ஸ்ரீகாந்த் முண்டே, கார்லோஸ் பிராத்வைட் ஆகிய வீரர்களை வெளியேற்றியுள்ளது.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி டேவிட் மில்லர், அண்ட்ரூ டை, சாம் குர்ரான், வருண் சக்ரவர்த்தி ஆகிய வீரர்களை வெளியேற்றியுள்ளது.

டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி கிறிஸ் மோரிஸ், கொலின் முன்ரோ, ஹனுமா விஹாரி, அங்குஷ் பெய்ன்ஸ், கொலின் இங்க்ராம் ஆகிய வீரர்களை வெளியேற்றியுள்ளது.

மும்பை இந்தியன்ஸ் அணி யுவராஜ் சிங், எவின் லெவிஸ், ஆடம் மில்னே, ஜேசன் பெரெண்டர்ஃப், பரிந்தர் சரண், பென் கட்டிங், பங்கஜ் ஜெய்ஸ்வால் ஆகிய வீரர்களை வெளியேற்றியுள்ளது.



# கெய்லை தக்க வைத்த கிங்ஸ் லெவன் பஞ்சாப்

2020ஆம் ஆண்டு ஐ.பி.எல். ஏலத்தையொட்டி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 8 பருவகாலத்திலும் அணியில் விளையாடிய வீரரான தென்னாபிரிக்கா வீரர் மில்லர், இங்கிலாந்து சகலதுறை ஆட்டக்காரர் சாம் கரன், நியூஸிலாந்து பந்துவீச்சாளர் ஆண்ட்ரூ டை ஆகியோரை கழற்றி விட்டுள்ளது.

அதேசமயம், அதிரடி ஆட்டக்காரர் மேற்கிந்தியத்தீவுகள் வீரர் கிறிஸ் கெய்லை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் அதிரடி வீரர் டேவிட் மில்லர் பஞ்சாப் அணிக்காக இதுவரை 79 போட்டிகளில் விளையாடி 1,850 ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஆனால், அவரைத் தக்கவைக்காமல் கழற்றிவிடப்பட்டுள்ளது.

இது குறித்து கிங்ஸ்லெவன்அணியின் நிர்வாகி தெரி விக்கையில்:

பஞ்சாப் அணியில் இருந்து வெளியேறிக் கொள்வதாக மில்லர் கேட்டுக்கொண்டதால் அவரின் முடிவுக்கு மதிப்பளித்து அவரை விடுவித்தோம் - என்றார்.

அடுத்ததாக இங்கிலாந்து சகலதுறை ஆட்டக்காரர் சாம் கரன், கடந்த முறை ஏலத்தில் ரூ. 7.2 கோடிக்கு வாங்கப்பட்டார். இடதுகை வேகப்பந்து வீச்சாளரான இவர் கடந்த ஐ.பி.எல்லில் ஹட்ரிக் இலக்கைக் கைப்பற்றினார். அவரையும் பஞ்சாப் அணி விடுவித்துள் ளது.

மேலும், தமிழகத்தைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்ரவர்த்தியையும் விடுவித்துள்ளது. அதேபோல நியூஸிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஆன்ட்ரூ டையும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆனால், 40 வயதாகி விளையாடி வரும் மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்ல் கடந்த ஆண்டு அடிப்படை விலையான ரூ. 2 கோடிக்கு வாங்கப்பட்டர்ர். அவரை பஞ்சாப் அணி தக்கவைத்துள்ளது.










இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.